போன் நெ. 15. விலை 2 அணா REGD. NO. 4645

திராவிடநாடு

மலர் 12 | 13—12—53 | இதழ் 24

சர்ச்சில், பாதையில்!

★

பிரிட்டிஷ் ராணி, தன்னுடைய பிரஜைகளைக் கண்டு வருவதற்காக, இலண்டன்மாநகரை விட்டுப் புறப்பட்டு, திக்விஜயம் செய்துகொண்டிருக்கிறார்! மீண்டும், இலண்டன் போய்ச்சேர ஆறுமாதகாலம் பிடிக்குமாம்!! உலக முழுமையும் சுற்றிய பிறகே, அவர் ஊர்திரும்பப் போகிறார்.

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், தனக்குள்ள செல்வாக்கைக் காட்டிக்கொள்ள, இந்த 'திக்விஜயத்தை' ஏற்பாடுசெய்து நடத்திக்கொண்டிருக்கிறது. ராணி திக்விஜயம் செய்யும் கோரத்தில், அவருடைய பிரயாணத்தை நடத்தும் ஒரு அதிகாரியின் வீட்டில், திருடன் ஒருவன் புகுந்து கொள்ளையடித்துச் சென்றிருக்கிறான். இது, உலக முழுமையும் தன் கீர்த்தியைக் காட்ட ராணி புறப்பட்டிருக்கும் சமயத்தில் நடந்திருக்கிறது!!

திருடன், ரூ 1-லட்சத்துக்கு மேற்பட்ட ஆடைகளை, அந்த அதிகாரியின் வீட்டிலிருந்து திருடிச் சென்றிருக்கிறான். அவன், பசி அவனுக்கு!

பசித்தவன், இவ்வண்ணம் இலண்டன் வீதியிலே, திருடுகிறான்—இலண்டனை யாளும் மன்னர்களோ, தங்கள் வீரப்பிரதாபத்தைக் காட்டிக் கொள்ளத் திக்விஜயம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்!

மனிதனின் அடிப்படைப் பிரச்சனைகளைத் தீர்க்காமல், தமது கியாதியையும், கித்தாப்பையும் காட்டிக்கொள்வதில், ஏகாதிபத்ய நாடுகளுக்கு இணையே கிடையாது. உலக முழுமைக்கும் உதவிகள் அளிக்கும் அமெரிக்காவில், ஏழைமனிதன் படும் அவஸ்தைகளைப்பற்றி, அடிக்கடி செய்திகள் வருகின்றன. ஆனாலும், அங்கிருக்கும் ஆதிபத்யம், உலகைக் கட்டியாள எண்ணுகிறது!

இந்த ஆசை, அந்த நாடுகளிலிருக்கும், ஏழை மகனுக்கு ஏற்படுவதில்லை. ராணியின் அதிகாரி வீட்டில், கன்னமிட்டவனுக்கு, வேண்டியதெல்லாம் தன்னுடைய காலத்தைக் கழிக்கப் பணமே யொழிய—வெளிநாட்டிலிருக்கும் புகழும் பெருமையும் அல்ல. அந்தத் திருடனைப்போல வறுமையால் வாடுவோர், இலட்சோபலட்சம் இருக்கிறார்கள், ஆங்காங்கும். ஆனால், திருடர்களும், விபசாரிகளும் ஏழைகளும் மலியும் அந்தச் சமுதாயத்தைப் பற்றி எண்ணாமல், ஆங்காங்கேயிருக்கும் ஆட்சிபீடங்கள், வெளியுலகை வேட்டையாடுவதில் ஈடுபடுகின்றன!



மதியழகன் விடுதலையானார்

★

10—12—53 காலை 5-மணிக்கெல்லாம் சென்னைச் சிறையிலிருந்து தோழர் கே. ஏ. மதியழகன் விடுதலையானார். பொதுச் செயலாளரும், ஏனைய தோழர்களும், பெருந் திரளாகக் கூடி அவரை வரவேற்று மாலைகள் அணிவித்தனர்.

இந்த ஆட்சிபீடங்களை, அலங்கரிப்போர், பணக்காரர்களின் பிரதிநிதிகளாயிருப்பதால், அவர்களுடைய ஆசையே, ஆட்சியின் கொள்கையாகிறது. இந்தப் பிரதிநிதித்துவ பாரம்பரையின் கூட்டமே, இன்று இங்கிலாந்தை ஆண்டு கொண்டிருக்கிறது!

மன்னனுடைய கையிலிருந்து இவர்களுடைய கைக்கு அரசாங்கம் வந்த சரித்திரம், மிகமிக உன்னதமானதாகும். இங்கிலாந்து என்று சொன்னால், இன்றும், 'பார்லிமென்டரி முறைகளின் தாய் வீடு' என்று சொலவார்கள். உண்மையும், அதுதான். இந்தப் பாராளுமன்றப் புதுமை, ஒரு நாளிலே பூத்துவிடவில்லை! மன்னனுக்கும் மக்களுக்குமிடையே, பல ஆண்டுகள் நடைபெற்றபோராட்டங்களுக்குப்பிறகு, இந்தப் புதுமைமலர்ந்தது. கிட்டத்தட்ட 300 ஆண்டுகளுக்கு முன்பு, 1642-ல் அங்கே நடைபெற்ற, உள்நாட்டுப் போர், குறிப்பிடக்கூடியதாகும். மன்னனின பக்கம் இருந்தோருக்கும், மன்னன்கையிலிருந்து பிரதிநிதிகளின் கைக்கு ஆட்சிவர வேண்டுமென விரும்பியோருக்குமிடையே, இந்தப் போர் நடைபெற்றது. இந்தப் போரின் விளைவாகத் தோன்றிய கட்சிகள்தான், கன்சர்வேடிவ் கட்சியும் லிபரல் கட்சியும்!! மன்னன் பக்கம் நின்றோர், கன்சர்வேடிவ்களாக இன்று விளங்குகிறார்கள். இந்தப் பெயர் மாற்றம், 1830-ல் ஏற்பட்டது. அதற்கு முன்னிருந்த பெயர், 'விக்'—'டோரி' என்பதாகும். 'விக்'—லிபரல் கட்சியாகவும், 'டோரி'யினர் கன்சர்வேடிவ்களாகவும் ஆயினர்.

இந்தக் கட்சியினர் தங்களுடைய சண்டை சச்சரவுகளையெல்லாம் தீர்த்து ஒரு சமரசத்துக்கு வந்தனர் அதன்படி, இருவரும் தேர்தல் நடத்தி, நாட்டை ஆள்வது—என்பதாகும். யார் ஆண்டாலும், மன்னருடைய நிலை, அழிக்கப்படாது என்கிற முடிவும் செய்யப்பட்டது. இதனால், ஆளும் கட்சி, எதிர்கட்சியின் கோரிக்கைகளுக்கு மதிப்புக்கொடுக்கவேண்டுமெனவும் முடிவுசெய்யப்பட்டது. இதனால் தான், அங்கே ஓரளவு ஆளும்கட்சி திமிர்கொண்டதாகத் திரியவில்லை! ஏதாவது நேர்ந்தால் தட்டிக்கேட்கிறது—எதிர்க்கட்சி. தாறுமாறுகள் செய்யாமல், எதிர்க் கட்சியின் குரலையும் மதிக்கிறது, ஆளும்கட்சி. இந்த 'ஜனநாயகம்' உள்நாட்டுக்கு மட்டும்தான்! ஆனால் வெளிநாடுகள் விஷயமென்றால், இந்த இரு கட்சிகளும், ஒன்றாகிவிடுகின்றன. ஏமாந்தவன்மீது ஏறிச்சவாரிசெய்வதே தம்முடைய ஆசையாகக்கொண்டு உலவுன்றனர். தம்முடைய சாம்ராஜ்யப் பெருமையை நிலைநாட்டுவதில் இரு கட்சிகளும் விட்டுக்கொடுப்பதில்லை! இந்தக் கட்சிகளில் எது ஆட்சி புரிந்தாலும், அங்கேயுள்ள ஏழையும் இல்லாதவனும், போய்விடுவதில்லை. அவர்களிருக்கத்தான், செய்கிறார்கள். அதனால்தான், ராணி, திக்விஜயம் செய்துகொண்டிருக்கும்போது, கன்னமிடுகிறான், கள்ளன்!

உள்நாட்டில் 'கள்ளர்கள்' உலவுகிறார்கள்—அவர்கள் உலவுவதற்கு அடிப்படைக் காரணமான வறுமை ஒழிக்கப்படவில்லை. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சிப்பீடதாரிகளோ, வெளியுலகை ஆட்டிப்படைக்கும் ஆசையை இன்றும் விடவில்லை. ராணியை, திக்குவிஜயம் செய்ய, அனுப்பிய அதே நேரத்தில், ஒரு ராஜாவின் 'சீட்டை'க் கிழித்திருக்கிறார், சர்ச்சில்! புகாண்டா எனும் சிறுநாட்டின் மன்னரை, 'டிஸ்மிஸ்' செய்திருக்கிறார் சர்ச்சில். மன்னர், ஊரிலிருந்து லண்டனுக்கு வந்துகொண்டிருந்தார் — ஊரை விட்டுப் புறப்படும்போது, மன்னரெனும் பெருமையோடுதான் கிளம்பினார்! ஆனால் லண்டன் விமான நிலையத்தில் இறங்கும்போது, மன்னராக இறக்கவில்லை — மனிதராக ஆக்கப்பட்டார்!! இந்தச் செய்தியைக்



30—11—53 அன்று விடுதலையான தோழர்கள், நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வே. கி. சம்பத் ஆகியோரும் பொதுச் செயலாளரும்.

கேள்வியுற்ற, அந்த மன்னரின் தங்கை 'ஆ'வெண்றலறி' உயிர்விட்டிருக்கிறாள். கிழக்காபிரிகாவிலிருக்கும் புகாண்டா ராஜகுடும்பத்து மகளுக்கு, இந்தக்கதி. ஒரு உயிர், போயிற்று! இன்னொரு உயிர் ராணியாக திக்குவிஜயம் செய்து கொண்டிருக்கிறது!

மேற்படி மன்னரை, பிரிட்டிஷ் சர்க்கார், பதவியிலிருந்து நீக்கியதற்குக் காரணம் என்ன? அவர், கம்யூனிஸ்டு என்பதா! — அல்ல, அல்ல—பிரிட்டிஷ் சர்க்காரின் எடுபிடியாக இருக்க அந்த மன்னர், சம்மதிக்கவில்லையாம். அதனால், 'கல்தா' கொடுக்கப்பட்டிருக்கிறது.

எடுபிடியாக இருக்க விரும்பாத எவரையும், ஆதிபத்யக்காரர்கள், விட்டு வைப்பதில்லை! அவர்களை எப்படியாவது, அழித்து ஒழித்து விடவே, முயலுகின்றனர். இந்த ஆதிபத்யவாதிகள், இங்கிலாந்தில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும் இருக்கிறார்கள் — இந்தியாவிலும், வளர்ந்து வருகிறார்கள்!

மன்னர்களாக இருந்தால், அவர்களைத் தட்டிக்கொடுத்து காரியங்களைச் சாதிக்க முயலுகிறார்கள். மன்னர்களிலும் யாராவது முரண்டினால், அவர்களை மட்டம் தட்டி மிரட்டுகிறார்கள்.

ஆதிபத்யஎதிர்ப்புமக்கள் மன்றத்திலிருந்து எழும்பினால், அந்தக் குரலை எழுப்பும் அரசியல் தலைவர்களைச் சிறையிலடைத்தும், சித்ரவதைசெய்தும் பழிசூட்டியும்படாத பாடு படுத்துகிறார்கள்.

இந்தியாவிலிருக்கும் சுதேச சமஸ்தான மன்னர்களென்றால், அவர்களை தட்டிக்கொடுப்பதில், இங்கு 'வளர்ந்துவரும் ஆதிபத்ய பீடம்' விரும்புகிறது.

நம்போன்றோர், என்றால், அழிக்கவும் பழிக்கவும் முற்படுகிறது.

இந்த ஆதிபத்யபாடம், 'சர்ச்சிலுக்கே' சொந்தமானது — ஆனால் சர்ச்சில் பரம்பரை, இந்தியாவிலும் அரும்பி வருகிறது. இதனை, எடுத்துச் சொன்னால், இங்குள்ளோருக்குக் கசப்பாயிருக்கும். என் செய்வது? உண்மையை மறைக்கமுடியாதே! காஷ்மீரும் — ராஜபுதன அரசுகளும்—பட்டேலின் விரலுக்குக் கட்டுப்பட்டன. மைஸூரும், திருவாங்கூரும், முரண்டின. பட்டேல், சர்ச்சிலானார். கட்டுப்பட்டவைகளைத் தட்டிக்கொடுத்தார்! முரண்டினவை மீது படையெடுத்தார்!!

மக்களிடம், சர்க்காரின் போக்கு பிடிக்காமல், விடுதலைக் தாகம் அரும்பி, அதனை எடுத்துச் சொல்லும் தலைவர்கள் அதிகரித்துவிட்டால், அவர்கள்மீது, ஆதிபத்யவாதிகள், வீசும் அஸ்திரங்களில், முதலாவது 'அவன் ஓர் அராஜகவாதி!' என்பதாகும். இதைத் தொடர்ந்து — நாட்டில் குழப்பம் ஏற்படச் செய்தவன் — அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்தவன்— இவ்விதம் ஏசல்கள் வீசப்படும். இதே குற்றச்சாட்டுகளைத்தான், சயனா தலைவர்களாம் டாக்டர் ஜகன் மீதும் அவர்தம் தோழர்கள்மீதும், சர்ச்சில் வீசினார். காரணம் அவர்கள் அந்நிய பிடிப்பிலிருந்து விலக விரும்பினார்கள்! தன்னுடைய எடுபிடியாக இருக்க அவர்கள் விரும்பாததைக் கண்ட சர்ச்சில் அத்தலைவர்களின், சர்க்காரை 'டிஸ்மிஸ்' செய்து அவர்களின் தோழர்களில் சிலரைச் சிறைக்குள் போட்டும் அடைத்திருக்கிறார். அவர்கள்மீது, சர்ச்சில் வீசும், குற்றச்சாட்டு — அவர்கள் அராஜகவாதிகள்! கம்யூனிஸ்டுகள்!! — பலாத்காரவாதிகள்— என்பதாகும்

இந்தக் குற்றச்சாட்டை வீசி, அவர்களைப் பதவியினின்றும்தள்ளி விட்டார், சர்ச்சில்.

ஆனால் தன்னுடைய பிரிட்டிஷ் சாம்ராஜ்யம், எத்தகையஜோதி, என்பதைக் காட்ட ராணியின் திக்விஜ

சென்னை 29-11-53 அன்று தோழர் மு. கருணாநிதிக்கு அளித்த வரவேற்புக் காட்சியில் ஒன்று.

யத்தைநடத்திக்கொண்டிருக்கிறது. உள்நாட்டு மகனின் குறைகளையும் போக்கவில்லை — ஊராளும் ஆசையும் விடவில்லை!!

இதே நிலையில்தான், நம்ம 'பண்டிட்ஜி'யும் இருக்கிறார்.

எனினும்; இவரை அண்மையில் கயானா தலைவர் டாக்டர் ஜகன் சந்தித்தாராம். பேசினாராம். ஜகனுக்கென்ன, நேருவின் உண்மை உருவமா, தெரியமுடியும்! அதனால்தன் குமுறல்களைக் கொட்டியிருக்கிறார்.

டாக்டர் ஜகன், தன்னாட்டு சுதந்திரக் கிளர்ச்சியைப்பற்றி — விவரிக்கிறார். படியுங்கள்;—

பிரிட்டிஷ் கயானாவின் சரித்திரத்தை யாராவது அறியவேண்டுமானால், கயானா கரும்புத் தொழிலின் சரித்திரத்தை பார்க்கவேண்டும். அடிமைமுறை ஒழிந்த பிறகு தோட்ட முதலாளிகளுக்கு புதிய பிரச்சனைகள் கிளம்பின. கியுபா, பிரேஸில் போன்ற அடிமை முறை தொடர்ந்து இருந்த நாடுகளுடன் போட்டிபோட வேண்டியநிலை. பிரிட்டிஷ் கயானாவின் மாஜி அடிமைகள் நாளுக்கு ஒருஷில்லிங் சம்பளம் கோரி கிளர்ச்சி செய்தனர். எனவே தோட்ட முதலாளிகள், சீன, போர்த்துகேய தொழிலாளிகளை இறக்குமதி செய்தார்கள். என்றாலும் கரும்புத் தோட்டங்களில் லாபம் குறையவே வர்த்தகத்தில் ஈடுபட்டனர்.

1870 தொட்டு 1917 வருடம் வரை, இந்தியர்கள் 'மலிவு உழைப்பாளர்களாக' இறக்குமதி செய்யப்பட்டார்கள் இந்த காலத்தில் நாடு பூராவும் மலேரியா அலை எடுத்தது.

நன்றி அறிவிப்பு

ஆறுமுக நேரியில் நிகழ்ந்த எங்கள் மன்றல் அன்று (4-12-53ல்) பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்கிய அனைவருக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். இது குறித்து திராவிட நாடு வளர்ச்சிக்கு ரூபா ஐந்து வழங்கப்பட்டது.

இரா. சிவபெருமான்,
இரத்னவதி.

ஜனத்தொகையில் பெரும்பகுதி இதற்கு இரையாகிறது. நிலைமை படுமோசமானது தொடர்ந்து இந்தியர்கள் குடியேறுவதை பிரிட்டிஷ் அரசாங்கம் தடைவிதித்தது கரும்புத் தோட்டங்களைவிட்டு இந்தியத் தொழிலாளிகள் விலகுவதை அரசாங்கம் தடுத்தது இந்தியர்களை வைத்திருப்பதற்காகவும். "மலிவு உழைப்பு" பட்டாளத்தை சிருஷ்டிப்பதற்காகவும் மலேரியா பிரச்னை தீர்க்கப்பட்டது.

உழுபவர்களுக்கு ஒரு அங்குல நிலமும் சொந்தமில்லை. சகலமும் நிலப்பிரபுக்கள் கையில். பிரிட்டிஷ் கயானா 83000 சதுர மைலுள்ளதாகவும், ஜனத்தொகை 5-லட்சத்திற்கு குறைவாகவும் இருந்தபோதிலும், மக்கள் முற்போக்கு ஆட்சி, நிலச்சீர்திருத்தம் செய்யவும், புதிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறுவவும் முன்வந்தது. உடனே கம்யூனிஸ்ட் பூச்சாண்டி காட்டி பிற்போக்காளர் புறப்பட்டனர்.

இந்த நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான அடிப்படையில் நிறுவ நாம் முனைந்தோம். கரும்புத் தோட்டத்திற்கு கையேந்தாத நிலையில் நமது பொருளாதாரத்தை நிர்மாணிக்க திட்டமிட்டோம்.

நாட்டின் பெரும்பகுதி விவசாயம் செய்யப்படாது வெட்டியாகக் கிடந்தது. தோட்ட முதலாளிகள் 5-லட்சம் மக்களை தோட்டங்களிலேயே வைத்திருக்க விரும்பினார்கள். அரிசியின் விலை குறைவாகவே வைத்திருக்கப்பட்டது. தொழில்களும், தொழிற்சாலைகளும் ஆரம்பிப்பது தடுக்கப்பட்டது. இந்த நிலையை முற்போக்கு மக்கள் ஆட்சி எதிர்த்தது. இந்த உண்மைகள் எல்லாம் உலக மக்களிடமிருந்து இருட்டடிப்புச் செய்யப்பட்டது. மக்கள் முற்போக்கு கட்சி ஓரே கட்சி ஆட்சியை, போலீஸ் ஆட்சியை, கம்யூனிஸ்ட் ஆட்சியை நிறுவுவதாக பிரிட்டிஷ் பிற்போக்காளர் எம்மீது பழி சுமத்தினார்கள்.

நாம் பலாத்காரத்தில் இறங்கியதாக வெள்ளை அறிக்கை கூறுகிறது. இதற்கு எனது மே 3-ம், 10-ம் தேதிய பேச்சுக்களை குறிப்பிட்டுள்ளது. இந்த இரண்டு பேச்சுகளும்

தூத்துக்குடி நிதி
வடாற்காடுமாவட்டமுயற்சி

வடாற்காடு மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம், 2-12-53-ல் மாவட்டச் செயலாளர் எ. எல். சி. கிருஷ்ணசாமி தலைமையில் கூடியது.

அண்ணா, நெடுஞ்செழியன், சம்பத், நடராசன், மதியழகன் ஆகியவர்களுக்கு டிசம்பர் மாத இறுதியில் மாவட்டத்தினர் சார்பில் வேலூரில் வரவேற்பு நடத்துவதென்றும், வரவேற்பன்று, தூத்துக்குடி வழக்குநிதிக்காக மாவட்டக்கழகத்தின் சார்பில் ரூ. 1000 அண்ணாவிடம் தருவதென்றும், கலைஞர் கருணாநிதிக்கும், முல்லை சத்தி ஆகியோருக்கு ஜனவரிமுதல் வாரத்தில் மாவட்டக் கழகத்தின் சார்பில் குடியாத்தத்தில் வரவேற்பளிப்பதென்றும் தீர்மானங்கள் நிறைவேறியது.

தூத்துக்குடி நிதிக்காக மாவட்டக் கிளைக் கழகங்கள் ரூ 50-க்குக் குறையாமலும் நகரக் கழகங்கள் ரூ 100-க்குக் குறையாமலும், வசூலித்து, மாவட்டக் கழகத்திடம் சேர்க்கவேண்டுமென்று நகர கிளைக் கழகச் செயலாளர்களை மேற்படி கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

நான் பதவி ஏற்குமுன் செய்யப்பட்டவை. இவை குற்றமானவை என்றால் எதற்காக மகாராணியார் என்னையும் என் சகாக்களையும் பதவி ஏற்க பணித்திருக்கவேண்டும் ஜோர்ஜ் நகரத்தை தீவைக்க நாம் முயன்றதாக குற்றம் சாட்டுகிறார்கள். இது முன்பு செய்யப்பட்ட சதி என்று கூறப்பட்டது. ஆனால் திரு புருக்வேக்கு கொடுத்த விடையில் புதிய அரசியல் சட்டம் ரத்து செய்யப்பட்ட பிறகு நடந்ததாக சொல்லியுள்ளார்கள்.

தொழிற் சங்கத்தலைவர்கள் என்ற முறையில் தொழிற் சங்க நடவடிக்கையால் செய்ய முடியாததைசட்ட ரீதியாக செய்ய முயன்றோம். 1948—49ல் சட்ட ரீதியாக நிலச்சீர்திருத்தம் செய்வோம் என்று கூறினேன். எமது தேர்தல்திட்டத்தில் இது உண்டு. கரும்புத் தோட்

(13-ம் பக்கம் பார்க்க)

'கோடு' உயர்ந்தது! 'குன்றம்' தாழ்ந்தது!!

'1946' அடிக்கடி நடப்பதேன்?

காங்கிரஸ் திராவிடரின் சிந்தனைக்கு

"பெர்முடா" எனுமிடத்தில், மூவர் சந்திப்பு முடிந்திருக்கிறது. பிரிட்டிஷ் சர்ச்சிலும், அமெரிக்க ஐசன்ஹோவரும், பிரெஞ்சு லேனியலும் சந்தித்துத் திரும்பிவிட்டனர்.

இங்கே, டில்லியிலும், மூவர் சந்திப்பு முடிந்திருக்கிறது. சென்னை ஆச்சாரியாரும், டில்லி நேருவும், காங்கிரஸ் தலைவர் காமராஜரும் சந்தித்து முடித்துவிட்டனர்.

பெர்முடாவில் சந்தித்தோர், 'உலக சமாதானம் தழைப்பதே எம் கொள்கை!' என்று வழக்கமான அகவலைப் பாடி முடித்துவிட்டனர். அதேபோல, டில்லிச் சந்திப்பும் முடிந்திருப்பதாக சென்னைக்குத் திரும்பிய ஆச்சாரியாரும, 'நாட்டுக்குச் சேவை செய்வதே என் கடன்" என்று அறிக்கை விடுத்துவிட்டார்.

அவரது அறிக்கையைக் கண்டபின், பண்டித நேரு அவருக்கு ஆதரவளிப்பதாகக் கூறப்படுவது உண்மையா என்பதை அறிய காங்கிரஸ் எம். எல். ஏ.க்களான ஏ. எம். சம்பந்தம், பஞ்சாட்சரம் செட்டியார், டி ஜி கிருஷ்ணமூர்த்தி ஆகிய மூவரும் மீண்டும் டில்லிக்குச் சென்றிருப்பதாக செய்தி வந்துள்ளது.

'மூவர் காவடி' விருப்பிய பலனைக் கொடுக்குமா! என்பது சந்தேகத்துக்குரிய விஷயம். ஆச்சாரியாரும், பண்டிதரும் அறிக்கைகள் விடுத்துவிட்டனரேயொழிய, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவரிடமிருந்து 'சந்திப்பு' முடிந்து நாட்கள் நான்காகியும், இன்னும் எவ்விதச் செய்தியும் இல்லை. டில்லியில்தான் இருக்கிறாராம்!

எதைச் சொல்வார், அவர்? பாபம்! டில்லிக் கலாசாலையில் 'பட்டம்' பெறச் சென்ற ஆச்சாரியார், 'மந்திரிப் பட்டம்' நிலைக்கும் விருதேடு அன்றோ திரும்பியிருக்கிறார்! விருதுநகராரின் விசாரம், இலேசில் தீரமுடியாததுதான்! தன்னுடைய சகாக்களுக்குக் கூறுவதற்காவது, ஏதாவது விளக்கத்தைத் தயாரித்துத்தானே ஆகவேண்டும். வீரன், விடபிரின் காலடியில் வீழ்ந்த காட்சி, மீண்டுமோர் முறை நடந்திருக்கிறது—காங்கிரஸ் அரங்கில். தோள் தட்டுகிறார், ஆச்சாரியார்! காண்கிறோம், இங்கு. ஆனால், கண்ணீர் சிந்துகிறார — என்ன செய்கிறார், காமராஜர். எதும் செய்திகளைக் காண முடியவில்லை எனினும் காமராஜர் சிந்தும் கண்ணீர், நம் மனக்கண்ணில் காட்சி அளிக்கிறது! மனம் வருந்தாமலா இருக்கமுடியும்?

இதே நிலை, 1946ல், இதே காமராஜருக்கு ஏற்பட்டதுண்டு அப்போதும், ஆச்சாரியார்தான், சூத்ரதாரி.

அன்று, நம் ஏட்டில் தீட்டிய கட்டுரைத் தலையங்கம்தான, 'கோடு உயர்ந்தது! குன்றம் தாழ்ந்தது!!".

கட்டுரையில் குறிப்பிடப்படுவோரில் மூவர், இன்றில்லை. காந்தியார்—ஆசப்அலி—டாக்டர் ராஜன் முதலியோர், கல்லறைகளாகிவிட்டனர். எனினும் அவர்கள் ஞாபகம், இந்த நேரத்தில் வராமுடியாமலிருக்காது. இறந்தோர் பெயரை மீண்டும், இந்தப் பிரச்னையில் இழுப்பதற்கு வருத்தம் வரத்தான் செய்கிறது. எனினும் என் செய்வது! என்றோ ஓர் நாள் துவங்கிய இந்த ஆதிக்கப் புயல் இன்னும் இறக்கவில்லையே!!

தோழர்கள் 6—1—46 அன்று நம் ஏட்டில் வந்த இந்தக் கட்டுரையைக் கண்ணுறவேண்டுகிறோம். காலம் மாறியிருக்கிறதேயொழிய— பொருள் மாறவில்லை. சிலர் இல்லையேயொழிய — அவர்கள் செய்த பணியை வேறு சிலர் செய்கிறார்கள். அன்றும் முக்கிய 'நடிகர்கள்' ஆச்சாரியார்—காமராஜ்தான். அன்றும் காமராஜ் தலையில் குட்டியது டில்லிதான்! இதை நினைவில் கொண்டு இதனைப் படியுங்கள்!!

*

கோடு உயர்ந்தது, குன்றம்தாழ்ந்தது! கோடு, குன்றம் இரண்டும் ஒரே பொருளைக் குறிக்கும் சொற்களன்றோ என்பர் அன்பர். உண்மை. அதுபோலவே இங்கு நாம் விளக்க எடுத்துக்கொண்ட பிரச்னை சம்பந்தப்பட்டமட்டில், உயர்ந்தது தாழ்ந்தது, என்னும் இருசொற்களும், கூர்ந்து நோக்கும் போது ஒரே பொருளையே தரும் தாம் விளங்கும்

எந்தப் பிரச்னை? எந்தக் கோடு! எந்தக் குன்றம்? ஆச்சாரியார் பிரச்னை! திருச்செங்கோடு! திருப்பரங்குன்றம! இவையே சிலபல திங்களாக வீடு, நாடு மன்றமெங்கும் பேசப்பட்டவை. இதுபோது திருச்செங்கோடு தேர்தல் செல்லுபடியாகக் கூடியதே என்று ஏற்பட்டுவிட்டபடியால், கோடு உயர்ந்தது என்றோம், திருப்பரங்குன்றத்திலே காங்கிரஸ் ஊழியர்கள் கூடிச் செய்த முயற்சி இதன்பயனாய் முறிகிறதாகையால், குன்றம் தாழ்ந்தது என்றோம். இதுதானா? இதைஏனோ முதலிலே புரியாதபடி கூறத் தொடங்கினீர் என்று கேட்பீரேல், கூறுவோம். இந்தப் "பிரச்னையை" அதற்கு நேரடியாகச் சம்பந்தப்பட்ட கட்சியினர் மக்கள் புரிந்துக் கொள்ளக்கூடாது என்ற நினைப்பு—

னையே பேசி வந்தனர். மக்கள், எங்கே, இந்தப்பிரச்னையைக்கூர்ந்து நோக்கி உட்பொருளைத் தெரிந்து கொள்கிறார்களோ என்று அச்சம் கொண்ட ஆச்சாரியார், செல்லுமிடமெங்கும் "வெல்ல மொழியிலே" இது சாமான்ய விஷயம்! இதுபற்றி நீங்கள் சிந்திக்கவேண்டாம்! "தேசப் பிரச்னையைக் கவனியுங்கள்" என்று பேசி வந்தார். வெல்ல மொழி என்று குறிப்பிட்டது, இனிமை இருந்தது. ஆனால் கொஞ்சம் மட்டமானது அந்த இனிமை என்பதைக் குறிப்பிடத்தான்.

ஆச்சாரியாரால் 'சின்ன விஷயம்' என்று குறிப்பிடப்பட்ட பிரச்னை உண்மையில் அப்படிப்பட்டதா, மக்கள் யோசித்துப் பார்க்கவேண்டிய அவசியமில்லாத சாமான்யப் பிரச்னைதானா? இல்லை! மிகச் சாமான்யப் பிரச்னையாக இருந்திருப்பின், தமிழகத்திலே கடந்த சில திங்களாக ஒரு கிளர்ச்சி இருந்திராது, பத்திரிகைகளிலே, தூற்றல் மொழிகள் குவிந்திராது, அசப்அலி வந்திருக்கவுமாட்டார். பிரச்னை, பெரிது என்பதுமட்டுமல்ல, போர், புகைப்படலத்துக்குப் பின்புறம் நடத்தப்பட்டது; மக்கள் கண்களுக்கு அமளியின்போக்கு தெரியக்கூடாது என்பதற்காக மதியூகமுள்ள மன்னன், தன்படையிலே புரட்சி கிளம்பினால், வெளியே தெரியவிடாமலேயே, புரட்சியை அடக்கப் பார்ப்பான்; ஆச்சாரியாரும் அதுபோலவே, இந்தப் பிரச்னையை மூடிவைத்தார்.

பிரச்னையோ, முக்கியமானது, ஒரு மூலாதாரப்பிரச்னையின் விளைவு. எரிமலை கக்கிய தீக்குழம்பு இன்று ஆறிவிட்டது, ஆறுவதற்கு முன்பு எதிர்ப்பட்ட பொருளைக் கருக்கியும் விட்டது. அதுமட்டுமல்ல: தீக்குழம்பு மீண்டும் கக்கும் நிலையிலேயே எரிமலை இருக்கிறது. இதனைச் சிறு பிரச்னை என்று ஆச்சாரியார் கூறுவது, சிறுமதியாலல்ல, மக்களின் மதியைச் சிறிதாக்க! நடந்தது என்ன? தமிழ்நாட்டுக் காங்கிரசுக்குத் தலைமைபூண்டு நடத்தத் தகுதியும் திறமையுமுள்ளவர் தலைக்கோலம் காந்தியாரின் சம்பந்தி என்ற நிலையைப் பெற்றவர், தத்துவார்த்த உரையும் தாத்தாக்காலக் கதையும்கூறி, தகர்ந்துபோன கொள்கைகளை எல்லாம்கூட நாட்டிலே விலைபோகச் செய்பவர், வேதியகுலச் சிரேஷ்டர், வாதாடுந் தொழிலிலே வல்லவர், பிரச்சார யந்திரங்கள் சகிதம் பத்திரிகைகள் வரவேற்க, பட்டிணப்பிரவேசங்கள் நடத்தி வந்தவராம ஆச்சாரியாரை இரண்டாம் தரத்தினரை, கட்டளைத் தம்பிரானை, காமராஜர், மடாலய காரியகர்த்தர், உள்ளே நுழையாதே என்று கூறினால், தூக்கி வாரிப் போடாதா? நடக்கக்கூடிய காரியமா என்றே எவரும், நடப்பதற்கு முன்னாள்வரை கூறியிருப்பர். ஆனால் நடந்தது! தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் காமராஜர், ஆச்சாரியார், திருச்செங்கோடு கமிட்டி மூலம் காங்கிரசில் நுழைந்தது தவறு என்று கூறினார், தடைவிதித்தார். படை திரட்டினார் ஆச்சாரியார், விடை இறுத்தது காமராஜரின் படை, திருப்பரங்குன்றம் நடந்தது, "கோபாலசாமிகள்" நடந்தன! இது, சாமான்யப் பிரச்னையா? சி. ஆர். கட்சியா? காமராஜ் கட்சியா? திருச்செங்கோடா? திருப்பரங்குன்றமா' என்று கேட்காத இடமோ, நாளோ கிடையாது! இதனைத்தான் ஆச்சாரியார், "மக்கள் கவனிக்கவேண்டிய அவசியமில்லாத விஷயம்" என்று கூறிவந்தார், ஏன்? மக்கள் கவனிக்க ஆரம்பித்தால். சி. ஆரா? காமராஜரா? என்று கேட்பதோடு நிறுத்தமாட்டார்கள், ஐயரா? நாடாரா? என்று ஆரம்பிப்பர், பார்ப்பனரா? பார்ப்பனரல்லாதவரா? என்று மேலால் பேசுவர், முடிவில் ஆரியரா? திராவிடரா? என்ற மூலப்பிரச்னைக்கே வந்துசேருவர்; இதைத் தடுக்கவே ஆச்சாரியார், இது சாமான்யமான பிரச்னை, என்று கூறினார் ஆனால், மக்கள் இதனால் சிந்திக்காமலே இருந்துவிட்டனர் என்று ஆச்சாரியார் கருதினால், அவர் ஏமாளியாவார். மக்கள் மிக்கூர்ந்து கவனித்தனர். திருச்செங்கோடு ஆதரவாளர்கள் நமது இயக்கத் தலைவர்களைக் காணும்போதெல்லாம் 'கிண்டியில் தோற்றவன்' போலக் காட்சி தந்தனர்; திருப்பரங்குன்றத்துக் கட்சியினர், போட்டிப் பரிசிலே வெற்றி பெற்றவர்போல விளங்கினர். திருச்செங்கோட்டாரின் திருவிழிகள் உள்முகத்திலே விழிக்க "வேண்டுமே" என்று கேட்டன நம்மை நோக்கி; குன்றத்தாரின் கூத்தாடும் கண்களோ "இப்போது என்ன சொல்கிறீர்கள்" என்று நம்மை நோக்கிக் கேட்டன. இது, சர்வசாமான்யமான சின்ன விஷயமானால், 'இனம் இனத்தோடு' என்ற நிலையே ஏற்பட்டிராது. இரு கட்சியின் படைபல விசேஷத்தைக் கவனிப்பவர்கள், இதிலே "இனப் பிரச்னை" இருந்ததை அறிவர், அறிந்தும் சிலர் மறுப்பர், விளைவு எண்ணி அஞ்சி. அறியாதாரும் இருப்பர், புரியாத காரணத்தால்.

இந்தப் பிரச்னையின் உட்கருத்து இருக்கட்டும், இந்தப் போரிலே வீசப்பட்ட 'வாசகங்களைக்' கவனிப்போம். மிகச் சாதாரணப் பிரச்னைக்காகவா, கடுஞ்சொற்கள், நஞ்சு தோய்ந்த சொற்கள், வீசப்படும்! காமராஜரோ, ஆச்சாரியாரோ, 'மட்டரக' வேலையிலே ஈடுபட்டவர்களா? ஒரு நாட்டை மீட்டிடும் படைதளபதிகளாயிற்றே! அவர்கள் 'சின்ன விஷயத்திலே' ஈடுபட முடியுமா? நேரமிருக்குமா? உண்மையில பிரச்னை, அடிப்படை உண்மையின் விளைவு. அடிப்படை உண்மை ஆரிய—திராவிடப் போர், காங்கிரஸ் ஆரிய ஆதிக்க அமைப்பு என்பது. இதனை உரத்த குரலிலே மறுத்து 'உத்தமர்கள்' என்று ஊராரிடம் 'விருது' பெற்ற வீரர்களெல்லாம், வழக்கமாக ஆரிய திராவிடப்போர் பிரச்னைப்பற்றிப் பேசும் நமது இயக்கத்தவர் பேசக் கூசும் மொழிகளைத் தாராளமாக வீசிக்கொண்டனர். இன்று 'சுமுகமான முடிவு' ஏற்பட்டுவிட்டது என்று இருசாராரும் களிக்கக்கூடும்! களிப்பு இருப்பதாகக் காட்டிக்கொள்ளாவிட்டால், திராவிட இயக்கத்தார், இப்போதாவது தெரிகிறதா ஆரிய திராவிடப் பிரச்னையின் உண்மை என்று கேட்பரோ என்ற அச்சம்.

எப்படியேனும் போகட்டும், எதைக் கொண்டேனும் மூடட்டும்

வாழ்த்துகிறோம்

இசைமுரசு நாகூர் எம். ஹனிபா' சென்னை வர்த்தகர் தோழர் பி அப்துல் ரஹீம் அவர்களின் செல்வி: ரோஷன் பேகத்தை 26—11—53ல் சென்னை மூர்தெருவில் வாழ்க்கைத்துணைவியாகப் பெற்றார். புதுமணம் பெற்ற நண்பருக்கு நமுடைய வாழ்த்துகள்.

தங்கள் முகாமுக்குள்ளே நடக்கும் அலங்கோலம் வெளியே தெரியாதிருக்க. நாடு, மறுபடியும் காண வேண்டிய அவசியமில்லாத அளவுக்கு 'அந்த அவலட்சணத்தை' மக்கள் பார்த்துவிட்டார்கள்.

சூக்ஷமபுத்தியுள்ள எல்லோருக்கும்,

1. ஆச்சாரியார்—காமராஜர் சண்டை
2. காமராஜரின் கை ஓங்கியது
3. கல்கத்தாவுக்கு டாக்டர் ராஜன் தலைமையில் பார்ப்பனர், காவடி தூக்கிச் சென்றது.
4. அசப் அலி அனுப்பப்பட்டது.
5. அவர் அளித்த தீர்ப்பு.
6. அதன் பயனாகத் தேர்தல் கமிட்டியை ஆச்சாரியாரைக் கலந்து பேசி அவருடைய சம்மதம் பெற்றுக், காமராஜர் அமைத்தது.

என்ற நிகழ்ச்சிகள் தெரியும், ஒவ்வொன்றும் ஒவ்வொரு நினைப்பைத் தந்துதான் இருக்கும்.

"என்ன இது இவர்கள் இருவருக்குள் சண்டையா? காமராஜர் அப்படியொன்றும் சண்டைக்காரரல்லவே. சாது தியாகி" என்று துவங்கிய நினைப்பு,

"ராஜாஜி எவ்வளவு பெரிய அறிவாளியாக இருந்தால் தான் என்ன? காங்கிரசின்கட்டுப்பாட்டை அவர் உடைத்தார், அதை எப்படி மறப்பது. அவரை ஆதரித்துச் சிலர் பேசியும் எழுதியும் வருகிறார்கள். பணம் வேலை செய்கிறது! ஆனால் நாடு காமராஜரின் பக்கம் இருக்கிறது. சத்தியம் ஜெயிக்காமல் போகுமா?" என்று வளர்ந்து,

"பார்த்தீர்களா இந்தப் பார்ப்பனர்கள் செய்தகாரியத்தை? தமிழ்நாடு முழுதும் காமராஜர் பக்கம் சேர்ந்தது, கடைசியில், இந்த டாக்டர் ராஜன், சிலபார்ப்பனர்களை இழுத்துக்கொண்டு கல்கத்தாவுக்கு ஓடுகிறார், காமராஜர்மேல் கோள் சொல்ல இந்தக் கூட்டத்தின் சுய ஜாதி அபிமானம் இப்படி இருக்கே! ஒரு தமிழனையும் தலைதூக்கவிட வில்லையே இந்தக் கும்பல். காங்கிரஸ் இந்த ஜாதிக்கு ஆதிக்கம் தேடுவதற்கா இருக்கிறது?" என்று—மாறி, அசப்அலிசென்னை வந்ததும், "பார்த்தீர்களா அக்ரமத்தை இங்கே தங்கள் ஜம்பம் சாயாது போகவே வடநாட்டிலே இருந்து இறக்குமதி செய்கிறார்கள் அசப் அலியை' என்று கசப்புடன் பேசி, அவர் தீர்ப்பளித்தபோது கோபமும் வெட்கமும் கொண்டு மௌனமாகி கடைசியில் காமராஜர் ஆச்சாரியாரைக் கலந்து கமிட்டி அமைத்தார், என்ற நிலை ஏற்பட்டதும் பெருமூச்சு பிறந்தது! அந்தப் 'பெருமூச்சு"—பெரும் புயலாக மாறும், இன்று இல்லாவிட்டால், நாளை!!

காங்கிரஸ், நாட்டு விடுதலைப் போரை நடத்தும் ஸ்தாபனம்என்று நம்பி அதில் சேர்ந்து, பிறகு அது வெறும் பார்ப்பன பாதுகாப்புச் சபை என்பதை தெரிந்து அதிலிருந்து விலகி பார்ப்பனியத்தோடு பலமானதோர் போர் தொடுத்தார் பெரியார்—போர் நடந்து வருகிறது—கடைசி சொட்டு இரத்தம் திராவிடன் உடலிலே இருக்கு மட்டும் போர் நடந்தேதீரும். காமராஜர்கள், காங்கிரசிலே இருந்து தேசப்பணி செய்தனர்—ஐயனே! நீங்கள் தேசப்பணி என்று எண்ணிக் கொண்டு எதைச் செய்கிறீரோ, அந்தக் காரியம், ஆரியப்பிணியை நாட்டிலே பரப்பவே பயன்படும் என்று பெரியார் கூற, காமராஜர்கள் காங்கிரஸ் ஒரு ஜனநாயகஸ்தாபனம் எனவே, பெரும்பான்மை மக்களாகிய திராவிடர்கள் காங்கிரசைக் கைப்பற்றி ஆரியருக்கு அதிலே ஆதிக்கமின்றிச்செய்துவிட முடியும் என்றனர், முடியவே முடியாது ஏனெனில், முப்புரியினர் வடநாட்டவரைத் துணைக்கு அழைத்துநமது முயற்சியை முறியடிப்பர் என்று எச்சரித்தோம்—காமராஜர்கள் சிரித்தனர்—அன்று. இன்று கதறுகின்றனர், அசப்அலி கொடுத்த அறைபெற்று நியாயமும் சத்தியமும், உறுதியும் கட்டுப்பாடும், பிரச்சாரமும் சுற்றுப் பயணமும் எங்கே போயின! போட்டிக் கூட்டங்களும் திட்டிய திட்டங்களும் என்னவாயின! நெற்றிக்கண்ணைக் காட்டினாலும் குற்றம் குற்றமே என்ற முழக்கம் ஏன் அடங்கிவிட்டது! எங்கே அந்தவீரம்? சரிந்தது! சரியத்தான் செய்யும். காமராஜர்கள் இனியேனும் கண்திறப்பரோ? நாம் நம்பவில்லை!

என்ன நடைபெறும் இனி? காமராஜரையும் அவருடன் கூடியவர்களையும், இந்நாட்டுப் 'பார்ப்பனர்" நமது பட்டியிலே பொறித்து வைத்துக் கொள்வர்—ஒரு சமயம் வரட்டும் என்று காத்திருப்பர்—சமயம் வரும்படியாகவும் செய்வர்—வந்ததும் பாய்வர்—ஏய்ந்தால், காமராஜரைப் பாதுகாக்க, வடநாடு ஆள் அனுப்பாது!

தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கு இவர் தலைவர்—இவருடைய தீர்ப்புக்குத் தமிழ் நாட்டுக் காங்கிரசாரின் பேராதரவு கிடைத்தது—தொண்டர்களின் ஆதரவு கிடைத்தது—கிடைத்தும் பயனற்றுப் போகும்படி வடநாட்டுத் தலைமையந்திரம் வேலை செய்தது. இதற்குப் பணிந்தார்!—குற்றேவல் புரிவோர் கொற்றவனாக முடியுமோ! காமராஜரின்கரத்தின்பலம், குன்றத்தோடு முடிந்தது. வடநாடோ, காமராஜர் குனியுமளவு குட்டிற்று! இதுவா, தேசசேவை? இதற்காகவா தியாகி கர்மவீரன் அஞ்சாநெஞ்சன் என்றெல்லாம் விருதுகள் பெற்றது'!

எவ்வளவு 'பாபக்கிருத்யம்' செய்தாலும், ஆச்சாரத்தை மறந்தாலும், பிராமணனுக்குள்ள பிறவி உரிமை போகாது என்பது மனுவின் திட்டம். அதே ஆட்சிதான் இன்றும் அமுலில் இருக்கிறது, ஆரிய பக்தி இருக்கிற காரணத்தால். ஆகவேதான், திருவிளையாடற் புராணத்தின் படி, தாயைப் புணர்ந்து தகப்பனைக் கொன்ற 'மாபாவி' ஒரு பிராமணனாக இருந்ததுபற்றி, ஆலவாயவன், அருள் சுரந்து, அவன்பாவத்தைப் போக்கினார் என்று கதை இருக்கிறது. இங்கு, ஆச்சாரியார் எதை எதைக் காங்கிரசும், காமராஜர் போன்ற மற்றத்தலைவர்களும், சிலாக்கியம், என்றுகொண்டாடினரோ, அதனை அவர் கேலிசெய்தார், கண்டித்தார், கேவலப்படுத்தினர். ஆகஸ்டுக் கலவரம்; எமது ஜீவனின் துடிப்பு என்றார் காமராஜர், ஆச்சாரியார், அது பித்தப்பிள்ளை விளையாட்டு என்றார். ஆகஸ்டு இயக்கத்தில் சேராதவர், அதனைக் கண்டித்தவர், ஆகஸ்ட்டுத் தியாகிகளைப் பழித்தவர் இந்த ஆச்சாரியார், இவரைத் தமிழ்நாடு ஏற்காதுஎன்று கூவினர். ஆச்சாரியாரோ, ஆகஸ்ட்

(9-ம் பக்கம் பார்க்க)

வாழ்த்தும் வணக்கமும்

தாயகத்தின் விடுதலைக்காக, மழலையின் மொழியையும் மனைவியின் காதலையும் மறந்து, பெற்றோரிடம் விடைபெற்ற வண்ணம், அறப்போரிலீடுபட்டு, ஆளவந்தாரின் வெறியாட்டத்துக்கு இரையாகி, சிறைச்சாலைக்குள்ளே கிடக்கும், தாயகத்தின் கண்மணிகளாம் நம்முடைய சகோதரர்களுக்கு, நம்முடைய வாழ்த்துதல்களையும் வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். வாழ்க, வீரர்கள்! ஒழிக அடக்குமுறை!

திராவிடநாடு

காஞ்சி] 13—12—53 [ஞாயிறு

ஒரு, துளி

★

வெடிகுண்டுகள் வீசுவதில், ஆச்சாரியார் ஓர் அலாதியான மனிதர் என்பதை, நாடு நன்றாக அறிந்து கொண்டிருக்கிறது. நாட்டின் மூலைமுடுக்குகளிலெல்லாம் தன்னுடைய ஆட்சியின் அலங்கோலங்கள்பற்றி மக்கள் ஏசுகிறார்களென்றறிந்ததும், அதனை மூட, ஒரு அவசரச் சட்டத்தை எடுத்து வீசியுள்ளார்! அடக்குமுறைப் பாணங்களை அள்ளி அள்ளி வீசிய அவரிடமிருந்து, அவசரச் சட்டமூலம்—நல்ல வேளையாக—எந்த அடக்குமுறைச் சட்டமும், உருவாகாமல் விவசாயிகள் சம்பந்தமாக ஒரு மசோதா புறப்பட்டிருக்கிறது! அடக்குமுறையால் நொந்துநோகும் மக்களின் உள்ளங்களைச் சாந்தப்படுத்தும் தந்திரமிது என்று அவரைச் சூழ்ந்திருக்கும் 'மாணிக்கங்கள்' செப்பின போலும்! அந்த மசோதாவின் பெயர், "விவசாயிகள் கடன் ஒத்திவைப்பு (தற்காலிக) மசோதா" என்பதாகும். கவர்னர் பிரானின் கைச்சாத்து பெற்று, மசோதா, அமுலுக்கு வந்திருக்கிறது! சட்டசபை, கூடுவதற்கு ஏழு நாட்களிடையிலிருக்கும்போது இத்தகைய அவசரச் சட்டம், ஏன்? —என்று, கேட்பார்கள், ஜனநாயகவாதிகள். ஆச்சாரியாருக்கும், 'ஜனநாயகத்துக்கும்' உள்ள இடைவெளி, மிகப் பெரிதல்லவா! அது மட்டுமின்றி, சட்டசபை கூடும் 'டிச 14' கண்டத்திலிருந்துவேறு, அவர் தப்பிழைக்கவேண்டுமே!! புது வேகத்தோடு கூடப்போகும் சட்டசபைக்கு ஏதாவதுபோட்டு கவனத்தையும் கருத்தையும் திருப்ப வேண்டுமன்றோ? அதனால், அவசர வெடிகுண்டு வீசப்பட்டிருக்கிறது!

ஆச்சாரியாரின் இந்த மசோதாவைப் பற்றிப் பற்பல, வியாக்யானங்கள் கூறப்படுகின்றன. ஏழை விவசாயிகளின் குறை தீர்ந்துவிடும்—ஒருவருடகாலத்துக்குப் பெருமூச்சு விடாமல் காலம் கழிப்பார்கள்—புதுமையால் குவியும் செல்வம் கடன்காரர்களுக்குப் போய்விடாது—அதனால், அவர்கள் சாகுபடியைச் சரியாகக் கவனிப்பார்கள்—நெல் குவியும்—நிலைமை சரியாகும்—என்றெல்லாம், ஏராளமான விளக்கங்கள், கூறப்படுகின்றன. இந்த நன்மைகள் யாவும் மலர்ந்தால், நம்மைவிட, மகிழ்ச்சியடைவோர் இருக்க முடியாது!

ஆனால், ஆச்சாரியாரின் மசோதாப்படி, நீண்டநாட்களாகச் சமுதாயத்தைப் பிடித்தவரும், "கேடுகள்" மறையாது. இடையில், ஒரு வருடம் இன்பம் ஏற்படும்!—என்கிறார். அதுவும் உண்டாகுமா, என்பதில், ஐயமேற்படுகிறது நமக்கு.

குறுகியகால சலுகையை அளிப்பதால், கொஞ்ச நாள் குளிர்ச்சியை அனுபவித்தவன், மீண்டும் கொடுமையான தீக்கு இரையாகும் நிலையை, அடையத்தான் நேரும்.

இந்திய நில மான்ய முறையையும், அதனைக் கட்டிக்காக்கும் ஏழைகளையும், இது போன்ற, 'இடைக்கால மசோதாக்களால்' ஈடேற்றிவிட முடியாது என்பதை எல்லோரும் அறிவர்.

ஆண்டாண்டு காலமாகயிருந்து வரும் சமூக அமைப்பை மாற்றி—கடன்கொடுப்பவனும் கடன் வாங்குபவனும் இருக்கின்ற நிலையை ஒழித்து—பண்ணையாரும், சிறு நிலச்சுவான்தாரும் உலவுகிற நிலைமையைப் போக்கி—உழைப்பவனுக்கே நிலத்தைச் சொந்தமாக்கி—பொதுவுடைமைப் பாதையில், புகும்படி, எல்லோரையும் கொண்டு செல்லும் வரையில், "இந்தக் கேடுகளை" நிரந்தரமாக ஒழித்துவிட முடியாது.

இந்தப் பாதை ஆச்சாரியாருக்கு கரும்பல்ல! வேம்பு!! அதனால்தான், அவ்வழி செல்லாமல்—செல்ல முடியாது என்பதைச் சொன்னால் பதவி நீடிக்காதோ எனும் பயமிருப்பதையும் வெளியில் சொல்லாமல்—ஏதோ இந்த 'குண்டை'யாவது வீசிவைப்போம் என, இம்மசோதாவைக் கொண்டுவந்துள்ளார்.

இதனால், நாட்டிலுள்ள வக்கீல்களுக்கு வேலையில்லாமற் போய்விடும்—கடன் கொடுப்போர் வாழ்வு கரையில் வீழ்ந்த மீன் போலாகிவிடும்—சமுதாய ஒழுக்கம் குறைந்துவிடும் — என்றெல்லாம் கும்பகோணத்து வக்கீல் சங்கம் குமுறலைக் கிளப்பியிருக்கிறது. இது, சகஜம்—வழக்கமானது. எனவே, அவர்களின் கருத்தில் நாம் இந்த மசோதாவைப் பார்க்கவில்லை. கடன் தேள் இருபத்திநாலுமணி நேரமும் கொட்ட ஏங்கிடும் விவசாயிக்கு — இடையில் ஒரு நிமிஷநேரம் சாந்தி கிடைப்பது — சிறிது மன ஆறுதலளிக்கக்கூடிய விஷயம்தான். ஆனால், அவனை, தேளின் கொடுக்கிலிருந்து காப்பாற்றும் 'மூலிகை' கைவசமிருக்கும்போது, அதனை விடுத்து, ஆச்சாரியார் ஏன், இந்த அற்பசந்தோஷத்தைத் தரப் புறப்படவேண்டும்? நாட்டில், ஏர்பிடித்துழுவோர் — வரப்பிலிருந்து நாட்டாண்மை பார்ப்போர் — வந்ததை 'வரவு' வைத்துக் களஞ்சியத்தில் பூட்டுவோர்—என்று பற்பல 'தட்டுகள்' இருக்கின்றன. முதல் ரகம், உண்மையில் உழைப்பது — இரண்டாவது ஓரளவு உழைப்பது—மூன்றாவது, உழைப்பையே அறியாது, வாழ்வது இந்த மூன்று ரகங்களும் நாட்டில் நீடிப்பதால்தான், உண்மை விவசாயி உலறுகிறான் என்கிறது, 'பொதுவுடைமை மூலிகை.' ஆனால் ஆச்சாரியாரோ, இந்தமூலப்பிரச்னை பக்கம் போகவில்லை — எல்லோருக்கும் நலன் தேடும் வகையில் தன்னுடைய மசோதாவைக் கொண்டு வந்துள்ளார். நிலத்தில் உழும் காத்தான், மேட்டுக்குடியாரிடம் வாங்கிய இருபது ரூபாயானாலும்-மேட்டுக்குடியார், பண்ணையாரிடம் வாங்கிய ரூபாய் இருபதினாயிரமானாலும் —எல்லோருக்கும் நன்மை வழங்கப் புறப்பட்டிருக்கிறது, இந்தத் திட்-

டம். காத்தான் கடன் பட்டது, தன்னுடைய குழந்தை குட்டிகளைக் காப்பாற்றுவதற்காக இருக்கும் — மேட்டுக்குடியார் பட்ட கடன், தன் நிலத்துக்கு வேண்டிய எரு, எருது ஆகியவைகளுக்காக இருக்கும் — பண்ணையார் வாங்கிய கடனை தன்னுடைய புதுக்கார், மகள் கலியாணச் செலவு என்பவைகளுக்காக இருக்கும். என்றாலும் இவைகள் எல்லோருக்கும் சமநிலை வழங்கி — கடன் நிவாரணம் தரப்போவதாகச் செப்புகிறார், ஆச்சாரியாரின், இந்த மசோதா. இதனால் யாருக்குலாபம்? யாருக்கு நஷ்டம்! என்பதைச் சிந்திக்கவேண்டும்.

ஒரு வேலி நிலம் வைத்திருப்பவனுக்கு, மொத்தம் 200-கலம் நெல் கிடைக்கிறது — ஐந்துவேலி வைத்திருப்பவனுக்கு 1000-கலம் மகசூலாகிறது — நூறுவேலி வைத்திருப்பவனுக்கு 20000-கலம் நெல் தேறுகிறது. கலம் ரூ 5 என்று வைத்துக் கணக்கிட்டால் முதல் நபருக்கு ரூ. 1000, இரண்டாவது நபருக்கு ரூ 5000, மூன்றாவது நபருக்கு ரூ. 100000 கிடைக்கும். இவ்விதம் கிடைக்கும் தொகையில், இவர்களில் கடன்காரருக்கு பணம் கொடுக்காமலிருப்பதால், யாருக்கு லாபம் கிடைக்கமுடியும்? கடைசியிலிருக்கும் நிலப்பிரபுக்கு அபரிமித லாபம் கிடைக்கும் — அதனைப் பல வழிகளில், பயன்படுத்துவான் — புதுக்காரும், ஆடம்பரமும் அதிகமாகும். இரண்டாவது நபர், ஓரளவு தன்னுடைய நிலைமையைச் சரிசெய்ய முனையலாம். ஆனால் கடைசி நபருக்கு, என்ன பயன்? அவனுடைய எல்லாச் செலவுகளையும் கழித்துப் பார்த்தால், எதுவும் மிஞ்சாது, அவனுக்கு! எனினும், முன்பிருந்த பசியைவிடக் கொஞ்சம் பட்டினி குறையும்.

ஆனால், இந்த ஓராண்டுக்குப் பிறகு! நிலப்பிரபு, சுகமாக வாழ்வான் — இடையிலிருப்பவனுக்கு தொல்லைகள் வர ஆரம்பிக்கும் — கடைசி நபர், மீண்டும் கஷ்டங்களில் உழலவேண்டியதுதான். எனவே, 'ஓராண்டுக்குமட்டும்' என்றிருக்கும் காலவரையறையை, குறைந்தது பத்தாண்டு'க்காவது உயர்த்தவேண்டும். 'எல்லோருக்கும்' வசதி என்பதற்குப் பதில், ஓர் வரையறை நிர்ணயிக்கப்படவேண்டும். இல்லையெனில், இந்த மசோதா, 'வடபாதி மங்கலம் மைனர்'களுக்கு ஓர் வரப்பிரசாதமாகும்!

ஏழை விவசாயிகள், இந்த ஓராண்டுக்காவது, ஓரளவு இன்பம் அனுபவிக்கட்டும் என்கிற நல்லெண்ணமிருந்தால், சர்க்கார், நெல்லின் விலையை உயர்த்தவேண்டும். இல்லையெனில், மற்றப் பொருள்களின் விலைகள் யாவும் உயர்ந்து கிடக்கும் நேரத்தில், கிடைத்த நெல்லையும் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாமல், கடனும் வாங்க வழியில்லாமல், திண்டாடவேண்டிய நிலை ஏற்பட்டுவிடும். எனவே, நெல்லின் விலையை —மற்ற மாகாணங்களைப்போல— ஓரளவு உயர்த்தவேண்டும்.

அதுமட்டுமின்றி, மற்றோர் பிரச்னையும் இருக்கிறது. சாதாரணமாக நிலங்களில் குத்தகைச் சாகுபடி செய்பவர்கள், தமக்குவேண்டிய நெல்—எரு—சாகுபடிச்செலவு முதலியவைகளுக்கு, முதலிலேயே பண்ணையார்களிடமிருந்து 'கடன்' பெறுவது வழக்கம்—அதை, அறுவடையின்போது, திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். இந்த மசோதாமூலம், இந்தச் சலுகை, ஏழைக் குத்தகைதாரர்களுக்கு வரும் சாகுபடி ஆண்டில் கிடைக்க முடியாது போய்விடும்! எந்த நிலப்பிரபுவும், முன்வந்து வழங்கமாட்டார்கள்! இதனால், குத்தகைதாரர்கள், திண்டாடித் தெருவில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதற்கான முன்னேற்பாடுகளையும் அரசியலார் காட்டவேண்டும். இல்லையென்று, கூட்டுறவு பாங்கிகளையும்—நில அடமான பாங்கிகளையும் காட்டிவிட்டால், அது கவைக்குதவாது ஏனெனில், இந்தப் பாங்கிகளிலிருந்து பணம் பெறுவதென்றால், குறைந்தபட்சம் இரண்டு மாத காலமாவது தேவைப்படுகிறது. எனவே இந்த விஷயத்தில் மிகவும் அக்கறை காட்டப்படவேண்டும்.

இந்தத் திருத்தங்களையெல்லாம் செய்வதோடு, ஏழை விவசாயிகளுக்கு, சர்க்காரின் ஏற்பாடுகள் மூலம் கடன் வழங்கும் திட்டமும்—அந்தக் கடனை வசூலிக்காமல் உதவும் வழி வகைகளும்—வகுக்கப்படவேண்டும்.

கடன் காலத்தை அதிகமாக்குவது — விவசாயிகள் யார் என்னும் எல்லையை நிர்ணயிப்பது — அவர்களுக்கு சர்க்கார்மூலம் உதவிகிடைக்கச் செய்வது — ஆகியவைகளை அரசியலார் செய்தால், ஓரளவு பயன் கிடைக்குமென எதிர்பார்க்கலாம். இல்லையெனில், காலவெள்ளத்தில் சிதறிய பனித்துளியாகவே இந்தச் சட்டம் போய்விடும். இதனை, ஆச்சாரியார் அரசாங்கம் கவனத்தில் வைத்துச் செய்யவேண்டும். பிரச்னையில் நல்லெண்ணமிருந்தால் மார்க்கம் இருக்கிறது! செய்கிறார்களா, பார்க்கலாம்!!

7-ம் பக்கத் தொடர்ச்சி

டோடு ஆண்டு முடிவடையவில்லையப்பா, என்றார்! கடைசியில், காமராஜர் ஆச்சாரியார் மாளிகைக்குச் சென்று, அவரைக் கலந்து ஆலோசித்துச் சம்மதம் பெற்று, கமிட்டி அமைத்தார்! ஆச்சாரியார் மட்டுமல்ல, பார்ப்பனர்கள் எல்லோரையும் 'ஜீரணம்' செய்துகொள்ள முடியும். அவர்கள் விரும்பினால் காந்தியாரை மகாத்மா என்பார்கள், இல்லையோ, வெறும் பனியா என்று தள்ளுவார்கள், உபயோகப்படுகிற வரையிலே காங்கிரசை ஆதரிப்பார், பயனில்லை என்றால் அதனையே கழிப்பார். என்பதைக் காமராஜர் உணரவேண்டும். அவர் பட்டகஷ்டம் அவ்வளவும் அவருக்குப் 'பிரமத்துவேஷி' என்ற பட்டத்தை வாங்கித் தந்ததன்றி காரியத்திலே வெற்றி கிடைக்கவில்லை. நேரடியாகநின்று வெளிப்படையாகப்பேசி, பிரச்னையை மூடிவைக்காமல் ஆரியத் திராவிடப்போர் என்று நேர்மையாகக் கூறி, திராவிடர் ஒன்றுகூடினாலன்றி, காங்கிரசுக்குள்ளே இருந்தே போராடுவோம் என்று பேசுவது பயனற்றுத் தான் போகும். ஆச்சாரியாருடன் போராடியபோது காமராஜர், கேள்விப்பட்டது என்ன? ஆச்சாரியார் ஒழிக்கப்பட வேண்டியவர்தான், அவர் மண்டைக்கர்வி, பதவிப் பித்தம் பிடித்தவர்— என்று பலரும் பகிரங்கமாகக்கூறினர் திருப்பரங்குன்றத்திலே ஆச்சாரியாரை ஆதரிக்கவந்த ஒரு 'ஐயர்' அடிபட்டார் என்று வதந்திவந்தது. அவ்விதம் "நேரபாலசாமி" ஏற்பட்டு, என்ன செய்யமுடிந்தது?

"தமிழ்நாடே! நீ தகுதியைத்தான் ஆதரிக்கிறாய்! நான் ஏழை, சாமான்யன், என்னுடன் கட்சி நடத்தும் ஆச்சாரியாரோ, பிரபலஸ்தர், காந்தியாரின் சம்பந்தி, ஆற்றல் மிக்கவர் ஆனால், தமிழகமே! நீ அவருடைய ஜொலிப்பைக்கண்டு மயங்கவில்லை உழைப்புக்கே மதிப்பளித்தாய், தியாகிக்கே சிரம்சாய்த்தாய். உண்மைக்கே உயரிய இடமளித்தாய்; கட்சி பெரிது, ஆள் அல்ல, கொள்கை பெரிது கட்டுப்பாடும் ஒழுங்கும் பெரிதுஎன்று தீர்ப்பளித்தாய். தமிழகமே! உனக்குத் தலைவணங்குகிறேன்" என்று காமராஜர், கூறி மகிழ்ந்து, மெய்மறந்திருந்த வேளையிலே வந்து சேர்ந்தார் அசப் அலி; ஆச்சாரியார்-காமராஜர் தகராறைத் தீர்த்துவைக்க. "தகராறு" என்ற பதத்தைப் பிரயோகித்ததே தவறு. ஏனெனில், தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவர் காமராஜர். அவர், தமிழ் நாட்டுக் காங்கிரஸ் கமிட்டியின் பெரும்பான்மையோரின் அனுமதியுடன் ஒரு தீர்ப்பளித்தார், கட்சியின் கட்டுப்பாட்டுக்காக அந்தத் 'தீர்ப்பை' ஏற்றுக்கொண்டிருக்கவேண்டியதே முறை. ஆனால் ஆச்சாரியார், 'காமராஜர்' தமிழ்நாடு காங்கிரசின் தலைவரென்றால் எனக்கு என்ன? பிரம்மகுலத்தவன் நான். நான் தவறு செய்ததாகவே வைத்துக்கொள்வோம், அதற்குத் தண்டனைதர 'காமராஜ்' துணிவதா? ஒரு திராவிடனுக்கு இந்தத் தைரியம் வருவதா? என்று எண்ணினார். தமது சகாக்களைக் கல்கத்தாவுக்கு ஏவினார். காமராஜர் முகத்தில் கரிபூசினார், இதுபோலத்தான் நடக்கும். வீராதிவீரனையும் அத வீணர் குலம், இழிவுபடுத்தியதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன என்று நாம் பன்முறை கூறினோம் — அதற்காகவே பழிக்கப்பட்டோம் நம்மைப் பழித்தவர்களின் நிலை இன்று? எப்படிப்பட்ட ஆச்சாரியார் என்று எண்ணிக்கொண்டு காமராஜர் போர்துவக்கினார்! காமராஜரை ஆதரித்த ஏடுகள், ஆச்சாரியாரைப் படம்பிடித்துக் காட்டியவைகளைக் கண்டபோது, காமராஜர் உண்மையிலேயே ஊரின் கண்டனத்துக்கு ஆளான ஒருவரை நீக்குவது எளிது என்றுதான் எண்ணியிருப்பார், ஊராரின் கண்டனத்துக்கு ஆளான ஒருவரை நீக்குவது தன் நீங்காக் கடமை என்றும் கருதியிருப்பார். அவ்விதம் அவர் எண்ணும்படி எழுத்தோவியங்கள் பல தீட்டப்பட்டன.

எப்படியோ ஆச்சாரியார் அசப் அலியால் பிழைத்தார் என்றபோதிலும் அவரை மதிக்கக் காங்கிரஸ் தமிழர்கள் தயாராயில்லை. காங்கிரஸ் தமிழர்களின் மனப்புண் எவ்வளவு ஆழமாக இருக்கிறது என்பதற்கு இக்கிளர்ச்சி ஓர் எடுத்துக்காட்டு. புண் இருப்பது உண்மை, ஆனால் புன்னகையுடன் ஆச்சாரியார், உலவுவதும் உண்மை. அன்று—அசப் அலியின் தீர்ப்பின்படி—வடநாட்டார் தாக்கீதின்படி காமராஜர், ஆச்சாரியார் வீடு சென்றபோது, எப்படிப்பட்டவரிடம் "கலந்து ஆலோசித்துச் சம்மதப்பெற" நாம் போகிறோம், எவ்வளவு கர்ஜித்தோம், தமிழகம் எவ்வளவு களித்தது, இருந்தும் என்ன, இதோ நுழைகிறோம், குனிந்ததலையுடன், என்று தானே கருதியிருப்பார்! உள்ளே உலவும் ஆச்சாரியார் என்ன எண்ணுவார். "வருகிறான் பார் வீராதி வீரன்! என்னை ஒழித்துக்கட்டக் கிளம்பிய சூரன்! கட்சிபெரிது ஆளல்லஎன்று மார்தட்டிய தீரன்! தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவன் வருகிறான். தாசர் குலத்துதித்தவன், பூசுரர் குலத்தவனும் என்னையன்றோ நீக்கலாம் என்று மனப்பால்குடித்தான், இப்போது, என்சக்தியை உணர்ந்து உள்ளே நுழைகிறான், வீரத்தை மூட்டைகட்டிவைத்துவிட்டு, என்று தானே எண்ணியிருப்பார். ஒரு விநாடிதான் இருக்கும் அந்த எண்ணம், ஆனால் எப்படிப்பட்ட விநாடி! வீரன்விப்பிரருக்கு அடங்கிய விநாடி! தமிழகம் தலையைத் தாழ்த்திய விநாடி! வடநாடு திராவிடத்தை ஆட்டிவைக்கும் விபரீதத்தை விளக்கும் விநாடி! வலையில் வீழ்ந்த மான்போல், காமராஜரின் கண்கள் திவலையுடன் இருந்த விநாடி! ஆச்சாரியாரோ அது சமயம், மன்னர்களை ஆண்ட மனுபோல, சந்திரகுப்தனை ஆட்டிவைத்த சாணக்கியன்போல், சிவாஜியைப் பணியவைத்த கங்குபட்டர்போல் வெற்றிக்களிப்புடன் நின்று 'வரவேற்றிருப்பார்' காமராஜரை! மறக்கமுடியாத விநாடியல்லவா அது? ஆகவேதான் குன்றம் தாழ்ந்தது, கோடு உயர்ந்தது என்றோம்.

ஆனால், முடிந்துவிட்டதோ போராட்டம்? இல்லை! முடிவுகிடையாது! ஆச்சாரியார் வேண்டுமானால் 'கெட்ட கனவு போன்றது அந்தப் பிரச்னை. அதனை இனி மறப்போம்' என்கிறார். பிரச்னை கனவு அல்ல, ஆரியருக்கு என்றென்றும் 'பிடி' இருந்தே தீரும் என்ற நிலை வெறும் கனவாகப் போகிறது. ஒரு முறை அல்ல, இனியும் பலமுறை வடநாட்டுக்குக் காவடி எடுக்கும் காட்சியும் காணவேண்டித்தான் இருக்கும். கோடு உயர்ந்தது குன்றம் தாழ்ந்தது, என்றால், நிரந்தர நிலை அல்ல! ஊசல் ஆடுகிறது! ❀

திராவிட நாடு பொங்கல் மலர்

—

சி. என். ஏ. தீட்டும்
கதை, கட்டுரைகள்

*

கழக முன்னணி வீரர்கள் வழங்கும்
அறிவுப்படையல்கள்

*

மூன்று கலர் ஆர்ட் முகப்பு

*

ஒவ்வொருவர் கையிலும் இருக்கவேண்டிய மலர்

*

ஏஜண்டுத் தோழர்கள், தங்களுக்குத் தேவையான காப்பியின் எண்ணிக்கை விபரத்தையும், அதற்குரிய தொகை முழுவதையும் 30—12—53-க்குள் அனுப்பவேண்டும்.

மலருக்குரிய தொகை முழுவதும் 30—12—53-க்குள் அனுப்பாதவர்களுக்கு மலர் கண்டிப்பாக அனுப்ப முடியாது.

தனி மலர்

தனி மலர் தேவைப்படும் தோழர்களும், சந்தாதாரர்களும் ரூபா 1—7—0 அனுப்பினால், ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும். இதனால், மலர்கிடைக்கவில்லை என்ற குறை ஏற்படாது.

நிர்வாகி.

ஓர் இலட்சியவாதி

“என்னைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தலாம் — கோடும் தண்டனையை வழங்கலாம். இதனால், நான் கோண்டிருக்கும் கோள்கையைச் சிறிதும் நீங்கள் அசைக்கமுடியாது. ‘என்னுடைய தேசம், எனக்குரியது’—என்று கூறுவதா, சட்ட விரோதம்? இங்கே, வெளிநாட்டார் ஆட்சியேன்? — என்று கேட்பதா, ராஜத் துரோகம்! இந்தக் குற்றச்சாட்டுகளை, என்மீது சுமத்தி என்னை விசாரிக்க, உங்களுக்கென்ன அருகதையிருக்கிறது? இந்த மண்ணுக்குரியவன், நான். என்னை விசாரிக்க நீங்கள் யார்!”

•

இவ்வண்ணம், லண்டன் நீதிமன்றத்திலே கடந்த 7-ந்தேதியன்று, முழக்கமிட்டிருக்கிறார், ஓர் இலட்சியவாதி.

பிரிட்டிஷ் அரசாங்கத்துக் கெதிராக அவமதித்துப் பேசினரென்று அவர்மீது குற்றம் சுமத்தி, கூண்டிலேற்றியிருக்கின்றனர். அங்குதான் மேலே குறிப்பிட்டபடி, முழக்கமிட்டிருக்கிறார்.

“என்னைச் சிறையிலே கோண்டு, தள்ளலாம், நீங்கள். அஞ்சவில்லை, நான். என்னுடைய உரிமைக்காக, நான், போராடத் தவறேன். சுதந்திரத்துக்குப் போராடுவது, தவறு — என்று நான் படித்த எந்த ஏடுகளும் எனக்குச் சொல்லித் தரவில்லை”

இவ்விதம், நீதிமன்றத்தில் நின்றபடி, சங்கநாதம் செய்திருக்கிறார்.

அவர், அயர்லாந்தின் ஒரு பகுதியான, அல்ஸ்டர் மாகாணத்தைச் சேர்ந்தவர். ஏனோதானோவல்ல! பார்லிமெண்டு மெம்பர்! பல்லாயிரக்கணக்கான, மக்களின் பிரதிநிதி. அவரது பெயர், வில்லியம் கேல்லி. வயது 31.

கடந்த தேர்தலில் அல்ஸ்டரிலுள்ள பாராளுமன்றத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால், இன்னும் ஒருமுறைகூட, அவர் பாராளுமன்றத்தின் படிக்கட்டுகளில் ஏறவில்லை! காரணம்—சோம்பலல்ல; பார்லிமெண்டுக்குச் சென்றால், அங்கே ராஜவிசுவாசப் பிரமாணம் எடுக்கவேண்டும்! அதன்படி பிரிட்டிஷ் ராணிக்குக் ‘கட்டுப்பட்டிருப்பதாக’க் கூறவேண்டும்!! ‘இவ்வண்ணம் கூறமுடியாது’ எனும் திடமான கொள்கையைக் கொண்டிருக்கும் காரணத்தால், இன்னும், அவர் பார்லிமெண்டு பக்கமே, செல்லவில்லை!! “நான் பார்லிமெண்டுக்குப்போய், சாதிப்பதற்கு எதுவும் இல்லை. என்னை, என்னுடைய தொகுதி மக்களும், அதற்காகத் தேர்ந்தெடுக்கவில்லை. நான் கொண்டிருக்கும் கொள்கைக்காக, என்னைத் தேர்ந்தெடுத்தார்கள். எனது கொள்கை, அயர்லாந்து அயர்லாந்தியருக்காக வேண்டும் என்பது! அயர்லாந்தின் ஒரு பகுதியான அல்ஸ்டர் மட்டும், ஏன், பிரிட்டிஷ் ராணியின் பிடியிலிருக்கவேண்டும்? என்பூமி விடுதலை பெறவேண்டும்! என்னுடைய அரசாங்கம், பக்கத்திலிருக்கும் இங்கிலாந்திலிருப்பதை, முடியாது. நான்வாழும் தேசம், குடியரசாக்கப்படவேண்டும்! அந்தக் குடியரசின் சுதந்திர பிரஜைபாக, நின்று நான் விசுவாசப் பிரமாணம் எடுப்பேனேயொழிய—எங்கோயிருக்கும் ராணிக்கும், அரசாங்கத்துக்கும் கட்டுப்பட்டு நடப்பதாக என்னால் உறுதிகூறமுடியாது— ஆகவே, நான் பார்லிமெண்டுக்குப் போக முடியாது” என்று தெரிவித்த வண்ணம் அயர்லாந்தில், நடமாடி வந்தார்.

அவர்மீதுதான் ராஜத் துரோகம் குற்றம் சாட்டியிருக்கிறது, பிரிட்டிஷ் சர்க்கார்.

தன்னுடைய தொகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் அவர் பேசினராம். “நான் ஓர் குடியரசுவாதி. நான் வாழும் அல்ஸ்டர் குடியரசாகி—அயர்லாந்துடன் வாழ்வதைக் காணவே விரும்புகிறேன். ஆகவே, எங்கேயோயிருக்கும், எவளோ ஒரு ராணிக்கு, விசுவாசப் பிரமாணம் எடுக்கமுடியாது. என்னுடைய சுதந்திரத்தைப் பெற எதைச் செய்யவும் தயாராகயிருக்கிறேன்” என்று சொற்பொழிவில் குறிப்பிட்டாராம்.

இவ்விதம் அவர் பேசியது பிரிட்டிஷ் ராணியை அவமதித்ததாகுமென்று கூறி, குற்றக் கூண்டிலே நிறுத்தியிருக்கின்றனர்! அப்போதும் அவர் அஞ்சவில்லை. முழக்கமிட்டிருக்கிறார்.

“ஐரிஷ் மண்ணிலே பிறந்தேன்—வளர்கிறேன். அந்த மண், என்னுடையது என்று சொல்வதா குற்றம்? ஐரிஷ் பூமி, ஐரிஷ் மக்களுக்கு ஆகவேண்டும் என்பதா ராஜத்துரோகம்?” என்று முழக்கமிட்டிருக்கிறார். இந்த முழக்கத்துக்கு, நீதி மன்றத்திலிருந்தோர், தக்க குறிப்பு வழங்கவில்லை! சட்ட ஏடுகளைப் பிரித்துப் பார்த்து, “ஐந்து வருஷத்துக்கு நன்னடக்கை ஜாமீன் கோடுக்கவேண்டும். 100 பவுன். ஈடுகட்ட வேண்டும்—கட்டத்தவறினால் 12 மாதம் சிறைவாசம் அனுபவிக்க வேண்டும்”

என்று, தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது! தோழர் கெல்லி—பாராளுமன்ற உறுப்பினர் — மக்கள் தூதுவர், அவருக்கு 12 மாதங்கள். ஆயினும், அவர் அபராதம் கட்ட மறுத்

தோழர் கருணாநிதிக்கு நகரசபை பாராட்டு.

டிச. 7-ந் தேதி, திருப்பத்தூர் (வ. ஆ.) நகரசபையினர், தோழர் மு. கருணாநிதிக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்தார்கள். நகரசபையின் சார்பில், தலைவர் தோழர் வீரபத்திரனும், பாராட்டிதழைப் படித்தளித்தார்.

தாராம்! 'சிறை வாழ்வே மேல்' என்று செப்பியிருக்கிறார்!!

அவரது வீரத்தையும், ஆர்வத்தையும் கண்ட நீதிபதி, "அப்படியானால், உங்களைச் சிறைக்கு அனுப்புவது தவிர, வேறு வழியில்லை. என்று நீங்கள், இந்த நன்னடக்கை ஜாமீனுக்கு உடன்பட்டு வருகிறீர்களோ, அன்றே சிறையிலிருந்து விடுதலை செய்யப்படுவீர்கள்—உங்கள், வீட்டுக்குச் சென்று, மனைவியையும் மக்களையும், சந்திக்கலாம்" என்று தெரிவித்திருக்கிறார். கெல்லி. சிறைவாசமே சிறந்தது, எனச் செப்பியிருக்கிறார்!

*

அல்ஸ்டர்—அயர்லாந்தின், வடபகுதியிலிருப்பதாகும். ஆனால், இங்கிலாந்தின் அரசுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. இதற்குத் தனி பார்லிமெண்டும், மந்திரி சபையும் இருந்தபோதிலும், பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு 13 உறுப்பினர்களை அனுப்புகிறது. இந்திய யூனியனில், சென்னையின் நிலை, எவ்விதமோ, அதுதான், அல்ஸ்டரின் நிலையும்! இங்கே சுமார், 13 லட்சம் மக்கள் வாழ்கிறார்கள். இதனை, அயர்லாந்திலிருந்து, பிரித்து தம்முடைய ஆட்சியின் கீழ்வைத்திருக்கிறது, பிரிட்டிஷ் அரசாங்கம்.

அயர்லாந்தின் தென் பகுதி பிரதேசமட்டும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தொடர்புகளையெல்லாம் வெட்டிக் கொண்டு தனிச் சுதந்திர குடியரசாக விளங்குகிறது. தென்பகுதி பெற்றிருக்கும் சுதந்திரம், தமக்கில்லையென்பதால், அல்ஸ்டரில் வாழும் மக்கள். அடிக்கடி உரிமைக்குரலெழுப்புகிறார்கள்.

இந்த அயர்லாந்து, சமீபகாலம் வரை, பிரிட்டிஷ் மகுடத்துக்குக் கட்டுப்பட்டிருந்த பிரதேசமாகும். ஆனால், செயல வீரர் டிவேலராவின் முயற்சியாலும், மக்களின் உரிமை வேட்கையாலும், அவர்கள் பற்பல போராட்டங்களை நடத்தி, வெற்றி பெற்றனர். 1937-ல் அயர், சுதந்திரப் பிரகடனம் செய்து கொண்டது. எனினும், வெளிநாட்டு விவகாரமட்டும், பிரிட்டிஷ் மன்னரின் பார்வையிலிருக்கும் என்று பெயரளவில் ஒரு ஏற்பாடு இருந்தது. இதுவும் 18—4—49-ல், போய்விட்டது. பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகள்—எனும், கும்பலிலிருந்தும் தன்னைக் கத்தரித்துக் கொண்டு வாழ்கிறது. இங்கு, ஐரிஷ் மொழிதான், தேசியமொழி—இரண்டாவது இடம்தான், ஆங்கிலத்துக்கு.

இவ்வண்ணம் தெற்கே வாழும் தங்கள் இனத்தவர், சுதந்திரத்தோடு வாழும்போது, தமக்குமட்டும் அடிமை வாழ்வேன்? — என்ற எண்ணம் அல்ஸ்டர் மக்களுக்கு உண்டாவதில், ஆச்சரியமில்லை. அதனால்தான், கெல்லி, முழக்கமிட்டிருக்கிறார், "வெளியானுக்கு என்னுடைய அயர்லாந்தின் எந்தப் பகுதியிலும், வேலையில்லை. இது முழுமையும், ஐரிஷ் குடியரசுதான்" என்பதாக. நீதியுள்ளமும், நெறியும் படைத்தோர், கெல்லியின் கூற்றை மறுக்கார். ஆனால், பிரிட்டிஷ் ஆதிபத்யவாதிகள், அவரை விட்டுவிடவில்லை—கூண்டிலேற்றி, தண்டித்திருக்கின்றனர்.

டிவேலரா, விரும்பிய ஐரிஷ் குடியரசு மலருமுன, அவரும் கெல்லியைப்போல, பன்முறை பிரிட்டிஷ் ஆட்சியின் சிறையில் காலங் கழித்தவர்தான். இந்தப் பாடத்தை அறிந்த, கெல்லிக்கு, சிறைவாசம் பூரிப்போதயம் கிடைக்கச் செய்யும், பூஞ்சோலையாகக் காட்சியளிப்பதில், வியப்பில்லை. அதோடு, தன்னுடைய நாடு, எப்படியும் விடுதலை பெறும் எனும் நம்பிக்கைநாதமும், அவரது இதயத்தில் எழுப்பிவிட்டது. அதனால் தான், அவர், சிறை செல்கிறேன்! இதனால் நீங்கள் என் கொள்கையைச் சிதறடித்துவிடமுடியாது!!—என்று கூறியிருக்கிறார்.

அவரது கூற்றைக் கேட்ட நீதிபதி குறிப்பிட்டாராம்—"ஏனய்யா, இவ்வளவு குரோதம் கொண்டிருக்கிறீர்? உங்கள் ஆசையை நிறைவேற்றுவதற்காக, உங்கள் மனிதர்களையே சொல்லுவதால், என்ன லாபம் ஏற்படுமோ, எனக்குத் தெரியவில்லை!" — என்பதாக. கெல்லி, பதிலளிக்கவில்லை, 'ஐயா! நீதிபதி அவர்களே! அவர்கள், எங்களைத் தங்கள் மனிதர்களாகக் கருதவில்லை. ஆகவே நானும் அவர்களை எங்களவராக நினைக்கவில்லை. அவர்கள் வேறு! நாங்கள் வேறு!"—என்று பதில் கூறவில்லையென்றாலும், நிச்சயம், எண்ணியிருப்பார்.

*

அயர்லாந்துக்கும் இங்கிலாந்துக்குமிடையில், சிறிது தூரம் தான். இரு இடங்களில் வாழ்வோரும், கிருஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள் தான். எனினும், இங்கிலாந்தின் தொடர்பின்றி வாழ விரும்புகிறார்கள்—தனித்த ஐரிஷ் குடியரசின் தன்மானப் பிரஜையாக வாழ்வோமென்று கர்ஜிக்கிறார்கள். அதற்காக, எது நேரினும், ஏற்றுக் கொள்வேன், என்று கெல்லி முழக்கமிடுகிறார்! இது போன்ற கெல்லிகள் ஓரிடத்தில், அதிகரிக்க ஆரம்பித்து விட்டார்களென்றால், அந்த நாடு விழிக்க ஆரம்பித்து தென்றே, பொருள். இந்த விடிவெள்ளிகள், அதிகமாக அதிகமாக, சிறைவாசமோ தீக்குண்டமோ, அவர்களின் கொள்கையை அழித்து விடாது. அதனால்தான், தோழர் கெல்லி, நீதி மன்றத்தில் நின்று உரக்கக் கூவினார்—"என் நாடு, விடுதலை பெற வேண்டுமென்பதே இலட்சியம். இதனைத் தடை செய்யும் ஆற்றல் எதற்கும் இல்லை யாராலும் முடியாது என்னை எது செய்தாலும், சரி. அதனால் என் கொள்கையின் அணுவைக் கூட அசைக்க முடியாது" என்று. இதே குரலை எழுப்பும், ஆயிரக்கணக்கான 'கெல்லி'கள்; திராவிடத்திலும் தோன்றி விட்டார்கள் எனும் தேன் செய்தியில், நாம் திளைத்துக்கிடக்கிறோம் இது. எனவே, கெல்லியின் வாசகங்களைக் கேட்கும் போது, உள்ளத்தில் ஒரு உவகை மலர்கிறது! ஆனந்தம் அரசோச்சுகிறது!! வாழ்க, அந்த இலட்சியவாதி.

வருந்துகிறோம்

நம் திராவிட நாடு ஏஜண்டும், ஆம்பூர் தி. மு. கழகத்தின் சிறந்த ஊழியருமான தோழர் பி மாணிக்கம் 5—12—53ல் அகால மரணமடைந்தார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம். தோழரைப் பிரிந்து துயரப்படும் அவரது குடும்பத்தாருக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

டத் தொழிலாளிகளுக்கு இது தெரியும். அதுபோலவே கரும்புத்தோட்ட முதலாளிகளுக்கும், பிரிட்டிஷ் ஆட்சியாளருக்கும்கூட இது தெரியும்.

பிரிட்டிஷ் கயானாவின் பிரச்னை கம்யூனிஸ்ட் பிரச்னை அல்ல. இன்றுள்ள அடிப்படையான பிரச்னை. தங்கள் ஆட்சி எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கு கயானா மக்களுக்கு உரிமை உண்டா இல்லையா என்பதே. பிரிட்டிஷ் ஆட்சியாளரின் மேற்பார்வைக்குக் கீழேயே தேர்தல் சுமுகமாக நடந்தது. இன்று நாங்கள் பேசுவதைப்போலவே அன்றும் பேசினோம். தேர்தலிலே நாம் வெற்றி ஈட்டினோம். 24 ஸ்தானங்களில் 18 ஸ்தானங்களை நாங்கள் பெற்றோம். ஆனால் பிரிட்டிஷ் ஆட்சி இன்று தனது ராணுவத்தையும், கப்பல் படையையும் இறக்குமதி செய்துள்ளது என்னையும் எனது அரசாங்கத்தையும் நீக்கியது.

எனவே கயானா பிரச்னை தெளிவானது. கம்யூனிஸமோ அல்லது கட்டட எரிப்போ அல்ல ஜனநாயகத்தில் நம்பிக்கை உண்டா இல்லையா என்பதே பிரச்னை "காலனி நாட்டு மக்களை சுயேச்சை ஆட்சிக்கு நாம் தயார் படுத்திக்கொண்டிருக்கிறோம்" என்று பிரிட்டிஷ் ஆட்சியாளர் சதா தம்பட்டமடிக்கிறார்கள். கென்யா, மலேயா போன்று கயானாவில் சுதந்திரப் போராட்டம் ஆயுதம் ஏந்திய [illegible] ஒரு பலாத்கார சம்பவம்கூட கிடையாது. பிரிட்டிஷ் ராணுவம் எங்கள் நாட்டில் இறங்கிய செய்தி கேட்டதும் "இதெல்லாம் ஏன்" என்று நாங்கள் ஆச்சரியப்பட்டோம் இருட்டடிப்பில் ராணுவம் இறங்கியது. யுத்தம் எங்கே? குழப்ப சம்பவம் ஒன்றுகூட இல்லையே. ஜனநாயக ஆட்சியை அப்பட்டமாக கொல்லும் கொலைகாரத்தனமே இது கம்யூனிசம் பலாத்காரத்திலும், கலகத்திலும், நம்புவதாக எமக்கு சொல்லிக் கொடுக்கப்படுகிறது. ஆனால், பிரிட்டிஷ் கயானாவில் ஜனநாயகத்தின்பேரில் ஜனநாயகம் கசாப்புச் செய்யப்படுகிறது. அதுவும் பலாத்காரத்தால், சகல ஜனநாயகங்களும், ஜனநாயகத்திலும், மனித இன நாகரீகத்திலும் நம்பிக்கையுள்ள சகலரும் இந்தப் பிரச்னையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

இது எமக்கும், மனித குலத்திற்கும் விடுக்கும் சவால். எமக்கு பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லை. சமாதானமாக இருக்கும்படி மக்களை நாம் கேட்டுக்கொண்டுள்ளோம். ஆனால், பட்டினி கிடக்கும் நூறாண்டுகளாக அடிமைப்பட்டு அவதிப்படும் பாட்டாளிகளும், மக்களும் பொறுமையை இழக்கலாம். எனவே, கயானா மக்களை வேட்டையாடி சுட்டுக் கொல்ல பிரிட்டிஷ் ஆட்சிக்கு இடம் தராதீர்கள் என்று உங்களை வேண்டுகிறேன். எங்களுக்கு சகல விதத்திலும் உதவுங்கள். இன்று பிரிட்டிஷ் கயானாவில் நடப்பது உலகம் முழுவதும் நடக்கலாம். காலனி நாடுகளில் நடக்கும் சுதந்திர இயக்கங்கள் பின்தள்ளிப் போடப்படலாம்.

ஜனநாயகத்தின்பேரில், மனித நாகரிகத்தின் பேரில், எங்கள் போராட்டத்திற்கு பூரண ஆதரவு தரும்படி பணிவன்போடு வேண்டுகிறேன்"

தூத்துக்குடி சதி வழக்கு

துவங்கப்பட்டுவிட்டது!

தி. மு. க சார்பில், ஏழு வழக்கறிஞர்கள் கலந்துகொண்டு வருகின்றனர்.

—❁—

கழகக் கண்மணிகள் சிவசாமி, தங்கப்பழம், நடராசன், சாமி, ரத்னம்

ஆகிய தோழர்களையெல்லாம் விடுதலை வீரர்களாக என்று காண்போம்?—எனத் தாயகம் தவிக்கிறது.

★

தோழர்காள்! துயர் துடைக்க ஒவ்வொருவரும் முன் வாருங்கள். இயன்றவை அனுப்பி உதவுங்கள். ரூபாய் ஏழாயிரம் கிடைத்துவிட்டது. இன்னும் ரூபாய் பதின் மூன்றாயிரமாவது தேவை!!

தேவையை நிரப்பத் தோழர்காள், விரைவீர்! விரைவீர்!

—தி. மு. க.

முகவரி: அ. பொன்னம்பலனார்
'அறிவகம்' ராயபுரம், சென்னை.

அவருடைய கூட்டுத் தோழரான பெர்னாமின், எழுதுகிறார்:—

"பிரிட்டிஷ் கயானாவின் பிரச்னை அந்த நாட்டு மக்கள் தாம் விரும்பும் அரசாங்கத்தை நிறுவ உரிமை உண்டா இல்லையா என்பதே. பிரிட்டிஷ் கயானாவின் அரசியல் சட்டம் வெறும் அடிமை சாஸனம். கீழ் சபையில் 27 உறுப்பினர்கள். 24 பேர் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். மற்றும் மூன்று பேர் பிரதம காரியதரிசி, அட்டர்ணி ஜெனரல், நிதி காரியதரிசியும். மேல் சபையில் 9-பேர். 6-பேரை கவர்னர் தன் இஷ்டப்படியே நியமிக்கிறார்.

மந்திரி சபையில் கீழ்சபையால் நேர்ந்தெடுக்கப்பட்டது ஆறுபேர். இவர்கள் அத்தனை பேரும் டாக்டர் ஜகன் தலைமையிலுள்ள மக்கள் முற்போக்கு கட்சியைச் சேர்ந்தவர்கள். மூன்று உத்தியோகஸ்தர்களும், மேல் சபையின் சார்பாக ஒருவரும் மந்திரிசபையில். வெளிநாட்டு விவகாரம், போலீஸ், சிவில் சர்வீஸ், சட்டமும் அமைதியும், நிதி மந்திரிப் பதவிகள் இந்த உத்தியோகஸ்தர்கள் கையில். சபைத் தலைவரை கவர்னரே நியமனம் செய்கிறார். மந்திரி சபையின் சிபார்சுகளை நிராகரிக்க கவர்னருக்கு உரிமை உண்டு.

இந்த குறுகிய அதிகாரங்களோடு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற மக்கள் முற்போக்கு கட்சி முயன்றது. வெளிநாட்டு நூல்கள் இறக்குமதியை தடைசெய்ய கவர்னருக்கு அதிகாரம் உண்டு. இந்த சட்டத்தை வாபஸ் வாங்கக் கோரி கீழ்சபை தீர்மானம் நிறைவேற்றியது. மேல் சபை இந்த தீர்மானத்தை எதிர்த்தது. கம்யூனிஸ்ட் நூல்களை இறக்குமதி செய்ய முயல்வதாக மக்கள் முற்போக்கு கட்சிமீது குற்றம் கூறப்பட்டது. என்றாலும் கட்சித் தலைவர்களின் வீடுகளை பரிசோதித்தபோது பிரிட்டிஷ் சோஷலிஸ்ட் தலைவர்களின் நூல்களையே போலீஸ் கண்டுபிடித்தது.

பிரிட்டிஷ் கயானாவுக்கு வர விரும்பிய வெஸ்ட் இந்தியன் தொழிற்சங்க தலைவர்களுக்கு வர நடமாடும் சுதந்திரம் வேண்டும் என்று மக்கள் முற்போக்கு கட்சி கோரியது எமக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றங்களில் இதுவும் ஒன்று.

தேர்தல் வாக்குறுதிப்படி வயது வந்தவர்கள் அடிப்படையில் சகலருக்கும் வாக்குரிமை வழங்கிய ஸ்தல ஸ்தாபனங்களின் தேர்தல்களை நடத்த விளைந்தோம். இதை இன்றுள்ள ஸ்தல ஸ்தாபனங்களின் தீர்ப்புக்கு விடுமாறு கவர்னர் சொன்னார். பழைய பெருச்சாளிகள் இயல்பாகவே எதிர்த்தார்கள். தேர்தல் என்றதும் இவர்களுக்கு மரண கிலி. என்றாலும் நாடு பூராவும் நடந்த எண்ணிறந்த கூட்டங்களிலே மக்கள் இந்த தீர்மானத்தை ஒப்புக் கொண்டார்கள். அதற்குள் பிரிட்டிஷ் பட்டாளம் எங்கள் மண்ணில் வந்திறங்கிறது.

மக்கள் முற்போக்கு கட்சிக்கும் கலோனியல் ஆட்சிக்கும் ஏற்பட்ட மற்றுமொரு மோதுதல், நாம் குடியிருப்போரின் நலனை பேண விரும்பியது. கரும்புத் தோட்டங்களிலும், வீடுகளிலும் முதலாளிகளுக்கு 'குரங்காட்டம்' போடத் தவறினால் இன்றுள்ள சட்டப்படி. குடியிருப்போருக்கு பாதுகாப்பு கிடையாது. சட்டப்படி உள்ள தேவைகளை பூர்த்தி செய்ய வீட்டு முதலாளிகள் தவறினால் நடவடிக்கை எடுக்க நோட்டீஸ் வழங்கப்பட்ட வேண்டும் என்று சட்டத்தை கொண்டு வந்தோம். கீழ்சபை நிறைவேற்றிய இந்த தீர்மானத்தை 'யதேச்சாதிகார சர்வாதிகாரம்'' என்று மேல் சபை நிராகரித்தது.

பிரிட்டிஷ் கயானாவில் 265 ஆரம்ப கல்லூரிகள் உண்டு. அரசாங்க செலவிலேயே நடக்கின்றன. என்றாலும் வெவ்வேறு மத சார்புடைய ஸ்தாபனங்களே இந்த கல்லூரிகளை நிர்வகிக்கின்றன. ஆசிரியர்கள், திறமை பாராட்டப்படாது மத சார்புடையவர்கள் என்பதற்காகவே நியமிக்கப்படுகிறார்கள். இந்த நிலைமையை மாற்ற விரும்பினோம். குறிப்பிட்ட நேரத்தில் இந்த மதஸ்தாபனங்கள் மத பாடங்கள் நடத்தட்டும் என்றோம் ''வருங்கால சந்ததியை கம்யூனிஸ்ட் மயமாக்குவதற்கான சதி'' என்று எம்மீது அபாண்டம் சுமத்தின.

பிரிட்டிஷ் கயானாவின் பிள்ளைகளுக்கு பிரிட்டனின் சரித்திரமும், பூகோளமுமே பாடப் புத்தகங்கள். பூரண சுதந்திரத்தையே தனது லட்சிய பாதையாகக் கொண்ட மக்கள் முற்போக்கு கட்சி பிள்ளைகள் தங்கள் தாய்நாட்டின் சரித்திரத்தைப் பற்றியும், பூகோளத்தைப்பற்றியும் அறிந்து கொள்ள வேண்டும் என்று கூறியது. கல்வித் திட்டத்தில் மாற்றம் வேண்டியது. தொழில் கூடிய கல்வித் திட்டத்தை கொண்டுவர வேண்டும் என்றோம். இதுவும் ''கம்யூனிஸ்ட் சர்வாதிகாரத்தை'' கொண்டு வருவதற்கான எமது சதி என்று தூற்றப்பட்டது.

கயானாவில் பிரிட்டிஷ் துருப்புக்கள் இறங்கியதை எதிர்த்து கீழ் சபையில் டாக்டர் ஜகன் ஒரு தீர்மானம் கொண்டு வந்தபோது, ''மேன்மை தங்கிய மகாராணியாரின் துருப்புக்கள் எங்கள் நாட்டிற்கு வந்ததாக செய்தி இல்லை'' என்று நியமன சபைத் தலைவர் கூறினார். எந்தக் குருடனும் பிரிட்டிஷ் துருப்புக்களை பார்த்திருக்கலாம். ஆனால்

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. க. தோழர்களுக்கு

தோழர்களே!

நமது மாவட்டத்தின் சார்பிலே 'தூத்துக்குடி சதி வழக்கு நிதி'க்காக இரண்டாயிரம் ரூபாய் தருவதாக பொதுச்செயலாளர் அவர்களிடம் வாக்களித்துள்ளேன்.

அதை அவர்கள் மகிழ்ச்சியோடு பெற இருப்பதாக 1–12–53 காஞ்சியில் நடந்த வரவேற்புப் பொதுக் கூட்டத்தில் கூறியுள்ளார்.

ஆதலினால், தனித் தனியாக யாரும் 'நிதியை' தலைமை நிலையம் அனுப்பாமல், சிறிது கவலையோடு, தனி நபர்களாயினும் அல்லது கிளைக் கழகங்கள் சார்பிலேனும் உடனடியாக எனது முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அன்பன்,
சி. வி. எம். அண்ணாமலை,
தி. மு. க. செயலாளன்,
செங். மாவட்டம்,
செங்கழுநீர் ஓடைத் தெரு
காஞ்சீபுரம்.

நியமன சபைத் தலைவர் கண்களுக்கு மட்டும் தட்டுப்படவில்லை.

பத்திரிகைகளும், ரேடியோவும், வெளிநாட்டு காரியங்களும் மக்கள் முற்போக்கு கட்சிமீது அபாண்டம் துஷ்ப்பிரச்சாரம் அவிழ்த்துவிட்டிருந்தும் தேர்தலிலே நாம் வெற்றி ஈட்டினோம். மக்கள் முற்போக்கு கட்சிக்கு மக்கள் வாக்களித்தால் அவர்களின் கழுதைகளையும் மற்றும் உடைமைகளையும் மனைவிமார்களையே முற்போக்கு கட்சியாளர் பறித்து விடுவார்கள் என்று-மதத்தலைவர்கள் மதத்தின் பேரால் இரைந்தார்கள்.

பிரிட்டிஷ் கயனா மக்களிடம் துப்பாக்கிகள் இல்லை என்றாலும் தம் சுதந்திரத்திற்காக அவர்கள் போராடுகிறார்கள். ஒத்துழையாமை வேலை நிறுத்தம். உள்ளிருப்பு ஸ்ட்ரைக்குகள் மூலம் சமராடுகிறார்கள். கயனாவைப் பொறுத்தளவிலே பிரிட்டிஷ் ஆட்சி அலறியது. அடிமை நாடுகளிலெல்லாம் "சுய ஆட்சி" என்ற பிரிட்டிஷாரின் வாக்குறுதியைபெற மக்கள் தீர்மானித்து விட்டார்கள் என்பதால்

அவர்களிடம் ராணுவம் இருக்கிறது. எங்களிடமில்லை; எனவே அவர்கள் தற்காலிகமாக வெல்லலாம். என்றாலும் அவர்களின் சாம்ராஜ்ய நாடுகள் பூராவையும் அவர்களால் வெல்ல முடியாது என்பது திண்ணம்."

*

தெள்ளத்தெளிவாக தங்கள் சுதந்திரக்கோரிக்கையைச் செப்பியிருக்கின்றனர், கயானா தலைவர்கள்.

அவர்கள் கோரிக்கையை நியாயம் நிரம்பியது என்று தெரிவித்தாராம் பண்டிதநேரு.

கயானா தலைவர்கள்மீது எந்தெந்தக்காரணங்களுக்காக சர்ச்சில்துரை மகனார், நடவடிக்கை எடுத்தாரோ, அதே காரணங்களைக் காட்டியே நம்மீது பண்டிதநேரு பாய்கிறார்!

உள்நாட்டில் நம்மீது பாயும் அவர் வெளிநாட்டுப் பிரச்னைக்கு ஆதரவு தருகிறார்.

உள்ளே ஏழ்மை தாண்டவமாடும் போது, வெளியே 'ராணி விஜயம்' நடத்திப்புகழ்ப்பெற நினைக்கிறார், சர்ச்சில்.

அதுதானே பண்டிதர் நிலையும்.

'கல்கி'க் கூட்டத்துக்கு!

வீரன் விடும், சவால்!

"ஆரியரும், திராவிடரும், தனித்தனி இனத்தினர் என்றும்; இந்தியாவுக்கு வெளியிலிருந்து இங்கே போந்தவர்கள் என்றும் வைத்துக் கொண்டாலும், அப்படி அவர்கள் இந்நாட்டுக்கு வந்தது, பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் என்று அதே ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். வந்தவர்கள் இமயமலையிலிருந்து குமரிமுனை வரையில் பரவியிருக்கிறார்கள். இரு இனத்தார்களும்; ஒருவரோடொருவர் பிரிக்கமுடியாதபடி கலந்துபோயிருக்கிறார்கள்"

*

தோழா! 'கல்கி' ஏடு, கடந்த 6-ந் தேதிய இதழில், இவ்வண்ணம் தீட்டியிருக்கிறது. எத்தன் என்றும் தன் குற்றத்தை ஒத்துக் கொள்ள மாட்டான் — எனவே, 'கல்கி'யின் எழுத்தில், எந்தப் புதுமையையும், நான், காணவில்லை. 'ஆரியர்—திராவிடர் என்னும் அறிவீனம்!' — 'யாரை, யார்விரட்டுவது?' என்று ஆத்திரத்தோடு, கேட்டிருக்கிறார்! இந்த வாரம், இந்தத் தலைப்பில், அவர் தலையங்கம் தீட்டவேண்டிய காரணம், 'ஆச்சாரியார்—காமராஜர்' சண்டையின் உச்சக்கட்டம் என்பதை, சிறுபிள்ளையும் அறியும் ஆனாலும், அவர் புத்தி போதிக்கக் கிளம்புகிறார்! பாபம் இருப்பது, கீழ்ப்பாக்கம் தானே!! 'கல்கி'க்கு, நான் விளக்கங்கள் கூறிக் கொண்டிருக்க விரும்பவில்லை.

பூணூலேன்?
பஞ்சகச்சமேன்?
நேக்கு—நோக்கு, ஏன்?
பிராமணசதஸ்—ஏன்?
வடமொழிக் கூச்சல்—ஏன்?
தேசீய கீதத்தில் திராவிடம் ஏன்?
அக்கிரகாரம், ஏன்?

என்றெல்லாம், நான் கேட்க ஆசைப்படவில்லை. ஆரியமும் திராவிடமும் கலந்திருந்தால் இந்தப் பிரிவுகளெல்லாம் இருக்காது என்பதை, உலகமே, உணரும்!

ஆரியமதத் திமிர் கொண்டதால் தான், ஆச்சாரியார் கூட பல இடங்களில், 'நான்பிராம்மணன். ஆகவே, ஆசீர்வாதம் செய்கிறேன்', என்றெல்லாம் கூறிவந்துள்ளார். எனவே, 'கல்கி'யின் கூச்சலால், இந்தக் காட்டாறு, அடங்கிடாது! எனினும், அவருக்கு ஒரு சவால், விடுகிறேன் — ஆண்மையிருந்தால், நெஞ்சில் உறுதியிருந்தால்—ஆச்சாரியாரைப் பிடித்து, இதனை நிறைவேற்ற ஆவன செய்யட்டும். இந்தச் சவாலும், அவர்களுக்கு நேர்மாறானதல்ல! அடிக்கடி, அழைக்கும் ஆண்டவன் — சம்பந்தமானது. இதனை, உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும் நான் வலியுறுத்தவில்லை. ஒருமாதம், காலம் தருகிறேன். செய்வாரா, கல்கி செய்து காட்டுவாரா, ஒரு மாதத்தில்!!

"ஆரியமும் திராவிடமும் கலந்துவிட்டதென்கிற உண்மையை நிரூபிக்குமுகத்தான், கோயில்களில் அர்ச்சனை செய்யும் குருக்கள் யாவரும் இன்று முதல், அகற்றப்படுகின்றனர். நாளை முதல், கோயிலினுள் ஆதித்திராவிட மக்களே, அர்ச்சனை செய்வார்கள். அவர்கள், குருக்கள் வேலையில் இன்று முதல் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இது, சர்க்கார், உத்தரவு. இதை மீறும் யாருக்கும், தீவாந்திரதண்டனை விதிக்கப்படும்."

இவ்விதம், தனது குருநாதர் ஆச்சாரியார் மூலம், உத்தரவொன்று பிறப்பிக்கும்படி செய்வாரா! அதன் மூலம், ஆரியமும் திராவிடமும் கலந்து விட்டதென்ற உண்மையை உலகுக்கு வழங்குவாரா!!

❁

வருந்துகிறோம்

தோழர் மீ. சு. இளமுருகு பொற்செல்வி அவர்களின் தாயார் ஈசுவர வடிவு அம்மாள் 7—12—53-ல் இயற்கை அடைந்தார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம்.

சம்பளத்தைக் குறையுங்கள்

'இது, என்ன அதிகமா?'' — என்று கேட்டார், ஆந்திரத் துணை முதலமைச்சர், சஞ்சீவிரெட்டி.

''ஆம், காங்கிரஸ் தலைவரே! அதிகம்தான். ரூ 1500'' — என்று பதிலளித்தார், தோழர் கோபாலகிருஷ்ணய்யா.

''மக்கள் வரிப்பணத்தில் 'குஷாலாக' வாழ்வதுதான் மந்திரி வேலை —என்று எல்லோரிடத்திலும் ஓர் எண்ணம் பரவிவிட்டது. இதை மட்டந்தட்ட வேண்டுமானுல், ரூ 1500 சம்பளம் கூடாது. குறைக்கவேண்டும்.'' என்ருர், தோழர் சுப்பாரெட்டி என்பவர்.

''மந்திரிகள் கவலையில்லாமல், வேலை செய்ய அதிகச் சம்பளம், அவசியம்'' என்ருர் துணை முதலமைச்சர் சஞ்சீவிரெட்டி.

''பணம் வந்தால், கவலை போய் விடுகிறதா? காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் கராச்சி மாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானப்படி நான் ஒரு திருத்தம்கொண்டுவந்திருக்கிறேன். மந்திரிகளின் மாதச் சம்பளம் ரூ 1500 லிருந்து' ரூ 500 ஆகக் குறைக்கப்படவேண்டும்'' — என்ருர், கோபாலகிருஷ்ணய்யா.

''ரூ 1000 மாவது இருக்கட்டும்!'' இவ்விதம், சஞ்சீவி ரெட்டி கேட்டார்.

''முடியாது. ரூ 500-க்குமேல் —கூடாது''—இவ்விதம, எதிர்க்கட்சியினர் உரைத்தனர்.

காங்கிரஸ் மந்திரிகள், முறைத்தனர்!

எம். எல். ஏக்கள், தலையசைக்க மறுத்தனர்!!

இறுதியில் ஓட்டு எடுக்கப்பட்டது.

மந்திரிகளின் ஆசையில் மண் விழுந்தது! மக்கள் பிரதிநிதிகள் விரும்பியபடி மந்திரிகளின் சம்பளம் ரூ 500 என்று சட்டசபையில் தீர்மானம் நிறைவேறியது!!

*

அலைமோதிக்கொண்டிருக்கும் ஆந்திர சட்ட சபையில், சின்னுட்களுக்குமுன் நடைபெற்ற முக்கிய சம்பவம், இது· ஆளும் கட்சியின் ஆசையை, எதிர்க் கட்சிக்காரர்கள் மட்டந்தட்டிவிட்டனர்.

ரூ 1500, ரூ500 என்று ஏற்பட்டுவிட்டது! இந்த நிகழ்ச்சியை நாம் படிக்கின்ற நேரத்தில, சிங்கோரிடத்தில், 'நம்ம' மந்திரி சுப்பிரமணியம் கூறினுராம் — ''நாங்கள் வாங்கும் சம்பளம் ரூ 1500, எங்களுக்குப் போதவில்லை'' என்று. ஆந்திரத்தில் அப்படி! இங்கே இப்படி!!

சுப்ரமண்யம் போன்ருருக்கு ரூ. 1500 என்ன, ரூ 100 லட்சம் கொடுத்தாலும் போதாமலிருக்கக் கூடும். காசைக் கரியாக்குபவனிடமும்—கண்டதே காட்சி கொண்டதே கோலமெனத் திரிபவனிடமும்—எவ்வளவு பணத்தைக் கொடுத்தாலும், அவன் செலவழித்துவிட்டு திண்டாடத்தான் செய்வான்! இந்த நிலைமை, சர்க்காரின் பொறுப்புகளுக்குமட்டுமே இருந்து வந்தது என நினைத்தோம். ஊதாரிச் செலவு செய்துவிட்டு, பின் உரத்துக் கூச்சலிடும் குணம், பொது விஷயத்தில் மட்டுமல்ல; சொந்த விஷயத்திலும் எனக்கிருக்கிறதென்று தெரிவிக்கிருர்போலும், சுப்ரமணியம். அனுதாபப்படுகிறோம்!

அவருக்குச் சாப்பிட, தங்கத்தில் செய்த அரிசியும், அதனைக் கொட்டிச் சாப்பிட வைரத்தாலான தட்டும், தேவைப்படலாம்! ஆனுல், அந்த ஆசைகளையெல்லாம் நிறைவேற்ற, மந்திரி பதவியையும் அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தையுமா, எதிர்பார்ப்பது? அழகான கார், அதற்கான செலவு, சிங்காரமான பங்களா, செல்வாக்கு—இத்தனையையும் தான் வழங்கியிருக்கிறோமே! இது, போதாதா? இன்னும் 'பென்ஷன்' கூடக் கேட்டாலும், கேட்கலாம், அவர். ஏனெனில், குருநாதர் ஆச்சாரியார், எப்போதோ, கவர்னர் ஜனரலாகயிருந்ததற்காக—இன்னும் 'கஜானுப் பணத்தை', வாங்கிக் கொண்டுதானேயிருக்கிருர்.

'ஆனமுதலில் அதிகம் செலவானுல், மானமழிந்து—மதிகெட்டு போனதிசையெல்லாம் எல்லார்க்கும் கள்ளனுய்,' உலவவேண்டி நேரும். ஏனெனில், மந்திரிப்பதவி, சாஸ்வதமல்ல! நினைத்தது நடக்கிறது—கேட்டது கிடைக்கிறது — எனும் கருத்தில், தோழர் சுப்ரமணியம் 'செலவாளி'யாகி விட்டால், நாளை மந்திரி வேலை காலியாகி, கோவையில் 'வக்கீல் போர்டை மாட்டும் காலம் வரும் போது, மிகவும்கஷ்டப்படவேண்டியிருக்கும்!

அதனுல், அவருக்கும் அவரோடு உலவும் மந்திரிமார்களுக்கும், அன்போடு தெரிவித்துக்கொள்கிருேம்— ''செலவைக் குறைத்துச் செய்யுங்கள். அதனைச் செயல் முறையாக்கிக் காட்டுமுகத்தான், சம்பளத்தை ரூ500 ஆக்கிக்கொள்ளுங்கள்''

'நம்ம' மந்திரிமார்களுக்கு, இதனைத் தெரிவித்துக்கொள்ளும்போது சட்டசபை M. L. A. தோழர்களுக்கும் ஒன்று தெரிவித்துக் கொள்கிருேம். 'தோழர்காள்! துடுக்குத்தனத்தாலும், பதவிப் போதையாலும், நம்ம மந்திரிகள் இன்று துள்ளலாம். ஆனுல், நாளை அவர்கள் கஷ்டப்படவேண்டி நேரும்.' இப்போது, எவ்வளவு சொன்னுலும், அவர்களுக்குத் தெரியாது. ஆகவே, நீங்களாவது ஒன்றுகூடி—கட்சி வித்யாசம் காட்டாது — ஆந்திரர்கள் செய்ததுபோல், அமைச்சர்களின் சம்பளத்தை ரூ 500 ஆக்குங்கள். சர்க்கார் கஜானுவையும்காப்பாற்றியதாகும்! தாங்க முடியாத செலவுகளைக் கற்றுக்கொண்டு, நாளைக் கஷ்டப்படும், 'நம்ம' சுப்ரமணியர்களைக் காப்பாற்றிய பெருமையும் சேரும்!! — தயவுசெய்து, செய்யுங்கள். மிகமிகக் கெட்டுவிடுவார்கள்.

*

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
5, Tirukkachinambi St., Kancheepuram.